விலை ரூபா: 15.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை (26.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282




## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 387 பட்டதாரிகள் நியமனம்

### இரண்டாம் கட்ட தெரிவுக்கு 439 பேர் தகுதி

(திருகோணமலை)

வடமாகாண அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் குறித்த பாடங்களிற்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முதற்கட்டமாக 387 பட்டதாரிகள் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட 387 பட்டதாரிகள் விபரம் நேற்று வடமாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு 387 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 439பேர் இரண்டாம் கட்டத் தெரிவுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ம.உ. ஆணைக்குழுவில் இருவர் சரண்

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவில் இருவர் சரணடைந்துள்ளனர்.

சாவகச்சேரி மற்றும் சுன்னாகத்தைச் சோந்த இருவரே இவ்வாறு அடைக்கலம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவினால் நீதிமன்றத்தி ல் பிரசன்னப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொதுமகன் ஒருவர் காணாமல் போயிருப்பதாக அவரது மனைவியால் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டநாதர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மோதல்களுள் சிக்கியுள்ள மக்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை

### ரிச்சட் பௌச்சர் நியூயோர்க்கில் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் மோதல்களுக்குள் சிக்குண்டிருக்கும் பொதுமக்களைப் பாதுகாப்பது ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கடமை என அமெரிக்காவின் ஆசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஐ.நா.சபையின் அமர்வில் கலந்து கொள்ள அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.சபையின் முன்பாக நேற்று முன்தினம் இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு நடத்திய கண்டனப் பேரணியில் 1000க்கும் அதிகமான அமெரிக்க, கனடா வாழ் தமிழர்கள் பங்கேற்றதை படத்தில் காண்கிறீர்கள்.

**உள்ளே...**

❖ ஆசிரியர் நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விபரம்.

❖ இரண்டாம் கட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான தெரிவு செய்யப்பட்டோரின் விபரம்.

❖ 'தரிசனம்' மூவின மக்களின் கருத்துக்களம்.

## கிளிநொச்சி மீது அடுத்த வாரம் தாக்குதல்கள் ஆரம்பமாகலாம்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கே யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப்புலிகளின் நீண்டகாலக் கட்டுப்பாட்டிலிருக்கும் கிளிநொச்சி நகரை அண்மித்திருப்பதாகவும், அடுத்து வாரமளவில் இந்த நகரத்தின் மீது முதலாவது தாக்குதலை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக நாம் திட்டமிட்டதுபோல் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இதுவரை காலமும் திட்டமிட்டபடி இவை நிறைவேற்றப்பட்டு வருவதாகவும், அடுத்த வாரம் அளவில் கிளிநொச்சி மீது முதலாவது தாக்குதலை மேற்கொள்ளமுடியும் என்று எதிர்பார்ப்பதாகவும் இராணுவத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பாரிய தாக்குதலுக்கு தயாராகும் விடுதலைப் புலிகள்!

### இணையத்தளச் செய்தியில் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி நோக்கிய தாக்குதலுக்கு படையினர் முயற்சித்து வருகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலுக்கு தம்மை தயார்படுத்தி வருகின்றனர் என்று இலங்கை தொடர்பான பாதுகாப்பு நிலைவரங்களை வெளியிடும் இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சியை நோக்கிய தனது நகர்வை படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வைத்தியர்கள் ஒருநாள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்கள் நாட்டின் தென்பகுதிகளுக்கு பிரயாணம் செய்வதற்கு மதவாச்சி வரை பிரயாணம் செய்வதற்கென வழங்கப்பட்டுள்ள வாகனம் சீராக சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும். வவுனியா வைத்தியசாலை பணிப்பாளரை ஜனவரிக்குள் அந்தப் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

வைத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈழத்தின் பெருமை சாற்றிய கானாமிர்தன் கலாபூசணம் கானமூர்த்தி



ஈழத்து நாதஸ்வர மேதை கானமூர்த்தி இசையையே பெயராகக் கொண்ட மாபெரும் கலைஞன். இவருக்கு இலங்கைஅரசு "கலாபூசணம்" எனும் பட்டமளித்து கௌரவித்தது.

இத்தகைய கலைமாமன்னன் கானமூர்த்தி கருவில் திருவுடைய இசைக் கலைஞன் என்றால் அது மிகையில்லை.

கானமூர்த்தி அவர்கள்நாதஸ்வரச் சக்கரவர்த்தி விஸ்வலிங்கம் கோதண்டபாணி இராஜராஜேஸ்வரிக்கும் மூத்த மகனாக 1945இல் பிறந்தார்.பத்து வயதினிலே நாதஸ்வரத்தைக் கற்கத் தொடங்கினார். தந்தையிடம் நாதஸ்வரத்தை கற்கத் தயங்கி பேரன் அறுமுகம்பிள்ளையிடம் கற்க ஆரம்

## இன்று அவரது 16ஆம் நாள் நினைவஞ்சலி

பித்தார்.கானமூர்த்தியின் ஆர்வம், திறன் கண்டு அவர் மாமனார் வை.நாராயணசாமி அவருக்கு மேலும் பயிற்சி அளித்தார்.

இராமனோடு இலக்குமணன் போல கானமூத்தியுடன் சகோதரன் பஞ்சமூர்த்தியும் இணைந்தார்.1963இல் சகோதரர்கள் இருவரும் கச்சேரி செய்தனர்.1967இல் இருவரும் அரங்கேற்றம் கண்டனர்.இருவரது கச்சேரியும் இடம்பெறப்போகிறது என்று கேள்விப்பட்டால் கூட்டம் கூட்டமாக மக்கள் சென்று முன்வரிசையில் அமர்ந்து விடுவார்கள். சகோதரர்கள் இருவரும் இணைந்து இசைக்கலைக்கு மெருகூட்டினார்கள்.தமிழ் கூறும் நல்லுலகெங்கிலும் சகோதரர்கள் புகழ் கொடிகட்டிப் பறந்தது.

அகில இலங்கைக் கம்பன் கழகம், கலைஞர்கள் இருவரின் இணையற்ற இசைப் பணியைப் பாராட்டி 25ஆவது ஆண்டுநிறைவு விழாவை யாழ். பல்கலைக்கழகத்தில் வெகு விமரிசையாக நடாத்தியது. இவர்கள் வெள்ளி விழாக்கண்ட சகோதரர்கள் என்ற பெருமையும் தமதாக்கிக்கொண்டனர்.

கானமூர்த்திகானம் இசையை மாபெரும் தவில் வித்துவான்கள் பாராட்டினர். அவர் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சுவிஸ் உட்பட பல நாடுகளில் நடாத்திய கச்சேரிகளில் பலரது பாராட்டையும் பெற்றார்.

அருட்கவி விநாசித்தம்பி அவர்களால் "நாதகலாநிதி" எனும் பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட கானமூர்த்திக்கு சர்வதேச இந்து மத குருபீடத்தால் "இசைஞான கலாநிதி" எனும் பட்டமும், பறாளாய் சுப்பிரமணிய தேவஸ்தானம் "நாதஸ்வர கான இசைமணி" எனும் பட்டமும் அளித்து கௌரவித்தன.

சகோதரர்கள் வெள்ளி விழாவின் போது நாதஸ்வர இசைமணிகள், நாதஸ்வர கான வாரிதிகள், நாகாமிர்த கானவேலன், நாதாமிர்தக்கிரவுஞ்சம் எனும் பட்டங்கள்அளித்துக் கௌரவிக்கப்பட்டார்கள்.

கானமூர்த்தியின் வழி அவர் புதல்வர்கள் கலைப் பயணத்தில் இன்று புலம்பெயர் நாடுகளிலும் வீறுநடை போடுவது எம் மண்ணின் பெருமைக்கு பெருமை சேர்க்கிறது.

**திருமதி வலன்ரீனா இளங்கோவன்**

நாத இசை பொழிந்து இசையால் மக்கள் மனங்களை ஈர்த்த அற்புதக் கலைஞன் கானமூர்த்தி இன்று நம் மத்தியில் இல்லை என்ற துன்பத்திடையே அவரின் ஆற்றலை அவர்நம் மண்ணுக்குத் தேடித் தந்த பெருமையை நினைத்து அந்தக் கலைஞனின் ஆத்ம ஆடும் தில்லைக்கூத்தனின் இசையுடன் சங்கமிக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## கானமூர்த்தியே -உன் நாமம் என்றும் எங்கள் எண்ணத்தில் நிலைத்திருக்கும்!

மண்ணுலகெங்கும் மதுரகானாமிர்தம் பொழிந்து
மக்கள் மனங்களை மகிழ்வித்த "கானமூர்த்தி "யாய்
எண்ணற்ற ரசிகர்களை அகிலத்தில் உன்நாதத்தினால்
ஈர்த்திட்ட அற்புதக் கலைஞனே! " கலாபூஷணமே "
விண்ணுலகை வலம்வந்து வானவரை மகிழ்விக்க
நாத மழை பொழிந்திடவே நாடி நீ சென்றாயோ-எம்
எண்ணமதில் என்றென்றும் உன் இனிய நாதத்தால்
உன் நாமம் நிறைந்திருக்க வாழ்வீரே கீர்த்தியாய்!

*நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்*


## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளைக் கழுவுதல் ஆண்டு 2008-2009**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கேள்விச் சபைத் தலைவரால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 2008-2009 ஆம் ஆண்டுக்கான அழுக்குத் துணிகளைக் கழுவுவதற்காக சீலிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1.பிரதேச செயாளரிடமிருந்துபெறப்பட்டபொது 170 படிவத்தில் சொத்துச் சான்றிதழ் மற்றும் ரூபா 500ஐ மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் செலுத்தி பெறப்பட்ட பொது 172 பற்றுச் சீட்டுடன் தமது அடையாள அட்டையையும் காண்பித்து 09/10/2008 பி.ப 2.00மணிவரை கேள்விப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

2.கேள்விகள் அடங்கிய தபால்கள் சீலிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் 2008/2009 ஆம் ஆண்டுக்கான அழுக்குத் துணிகள் கழுவுதல் எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 10/10/2008 மு.ப 10 மணிவரை அல்லது அதற்கு முன்புகிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ வைத்தியசாலை கேள்விப் பெட்டியில் இடலாம்.

3.கேள்விகள்10/10/2008அன்று 10மணிக்கு வைத்திய சாலைஅலுவலகத்தில் திறக்கப்படும் .அத் தருணம் கேள்வித்தாரர் அல்லதுஅவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளித்திருக்கலாம்.

4.கேள்விகளுடன்சம்பந்தப்பட்ட கேள்விப் பிணை அல்லது பெறுமதிமிக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயருக்கு பணம் வைப்பிட்டுபெறப்படும் பற்றுச் சீட்டின்மூலப்பிரதி மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழையும் இணைத்திருத்தல் வேண்டும்.

5.மேலதிக விவரங்களுக்கு போதனாவைத்திய சாலைக் கணக்காளருடன் தொடர்புகொள்ளவும்

வைத்திய கலாநிதி ஏ.ஈ ஞானஜோதி,
பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/1803)


# குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

**-பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம்**

வடமராட்சியில் கரவெட்டி நெல்லியடிப் பிரதேசங்களில் கொலை, கொள்ளை, திருட்டு,கசிப்பு விற்பனைக் குற்றச் சம்பவங் கள் அதிகரித்து வருகின்றன. இது மிக வேத னைக்குரியது. பொதுமக்களின் ஒத்துழைப் புக்களினால் தான் இக் குற்றச்செயல்களைக் கட்டுப் படுத்தி மக்களைப் பாதுகாக்க முடியும். இதற்கு கிராமசேவை உத்தியோகத்தர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

மேற்கண்டவாறு கரவெட்டி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான கூட்டத்திலே உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரிய நாயகம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை கரவெட்டி பிரதேச செய லர்கள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், வடமராட்சிப் பிரதேச கிராமசேவை உத்தியோ கத்தர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தொடர்ந்து உரையாற்றிய நீதிபதி அரியநாயகம் குறிப்பிட்டதாவது,

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி மக்களைப் பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும். இவைகளை நடைமுறைப் படுத்த நீதிமன்றம் தயாராகவுள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்பே இன்றுதேவையாக உள்ளது. நெல்லியடி, வதிரி, கரவெட்டி, கரணவாய், நவிண்டில் பகுதிகளிலே இக்குற்றச் செயல்கள் தற்போது அதிகரித்துள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் அச் சத்துடனும் பீதியுடனும் வாழ வேண்டிய அவல நிலையாக உள்ளது. கசிப்பு உற்பத்தி வேம்படி, துன்னாலை, தக்குச்சம்பாதி, அல்வாய் போன்ற இடங்களில் நடைபெறுகின்றன. கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த மேலும் கடும் நடவடிக் கைகள் மேற்கொள் ளப்படும்.

**கிராம உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்**

கிராம சேவை உத்தியோகத்தர்கள் கிராமிய மக்கள் மத்தியிலே விழிப்புணர் வுகளை ஏற்படுத்த வேண்டும். தமது பிரிவுகளில் நடைபெறும் சகல நடவடிக்கைகளையும் கண்காணிக்க வேண்டும். சந்தேகத்திற்கிடமான சகல நடவடிக்கைகளையும் சட்டத்தின் முன் கொண்டு வருவது கிராம சேவை உத்தியோகத்தர்களின் பணியாகும். இச் செயற்பாடுகளுக்குப் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும், பொது மக்களின் ஒத்துழைப் பின்றி குற்றச் செயல்களை கட்டுப் படுத்த முடியாது. ஒரு சில கிராம சேவை உத்தியோகத்தர்கள் தகவல்களை தெரிந்தும் அத் தகவல்களை உரிய இடங்களுக்கு வழங்குவதில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. இது கண்டிக் கத்தக்க விடயம். இதனால் நீதிமன்றத்திற்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன.

வேறு பிரதேசங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சிலர் இப் பிரதேசங்களில் நடமா டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தால் அது பற்றி உடன் நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த கொலை, கொள்ளைகள்,திருட்டு குற்றச்செயல்கள் அண்மைக்காலமாக மீண்டும் தலை தூக்கி மக்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வருகின்றது. இக் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப் படவேண்டும். இக் குற்றச்செயல்களுக்கு எவரும் இடமளிக்கக் கூடாது.

பாதுகாப்புக்கருதி மக்கள் மாலை 6.30 மணிக்குப் பின்னர் தேவையின்றி நடமாடு வதைக் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பொது இடங்கள், வீதிகள், ஆலய மடங்களில் ஒன்றுகூடி நிற்பதையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோர் பொலிஸாரினால் கைதுசெய்யப்படுவார். பாதுகாப்புப் படையினர் சட்டம், ஒழுங்குகளை நிலைநாட்ட வேண்டிய நடவடிக் கைகளை மேற்கொள்வார். குற்றச் செயல் கள் பற்றிய தகவல்களை பொலிஸாருக்கோ இராணுவத்தினருக்கோ நீதிமன்றத்தின் கவனத்துக்கோ கொண்டுவரலாம்.

**மாலை 6.30மணிக்குப் பின் மதுபான சாலைகள் திறந்திருக்கக் கூடாது**

மதுபானசாலைகள் எதுவித காரணங் கொண்டும் மாலை 6.30 மணிக்குப் பின் திறந்திருக்கக் கூடாது. உணவு, சிற்றுண்டிச் சாலைகளும் 6.30 மணிக்குப்பின் தேவை யற்று திறந்திருக்கக்கூடாது. திறந்திருந்தால் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு வசதி வாய்ப்பை ஏற்படுத்தும். பொதுமக்களின் இன்றைய அச்ச நிலையை கருத்திற்கொண்டு அவர்களை பாதுகாப்பதற்காகவே இச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி இன்றைய அச்ச நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முழுமையான ஒத்துழைப்புக் களை வழங்க வேண்டும். (ஓ-52)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு. 26 ♦ 10 ♦ 1950



இறப்பு 26 ♦ 09 ♦ 2004

**ஜெயராணி இராமநாதன்**

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர் கட்டடத் திணைக்களம் திருகோணமலை)

காலங்கள் தான் கடந்தோடிற்று
எம் கண்ணீர் இன்னும் காயவில்லை
ஆண்டு 4 மறைந்தாலும்
ஆறாது அம்மா எம் துயரம்

*தகவல்*
இ.ரஞ்சனா, இ.சசிதரன்
பிள்ளைகள்

(I/64)

# இன்று ஒரு தகவல்

## சித்திகள்

ஒரு சாமியார் இருந்தார். அவர் பல காலம் தவம் செய்து பல சித்திகள் பெற்றவர். இருந்தாலும் அவர் இடையிடையே சில சித்து வேலைகளும் செய்யஆரம்பித்தார்.

இதனால் கொஞ்ச நாளில் அவருக்கு தற்பெருமை வந்து விட்டது.இது அந்த ஆண்டவனுக்கே பொறுக்க முடியவில்லை இவருடைய தற்பெருமையைப் போக்குவதற்குஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்.

உடனே ஒரு சந்நியாசி வேடத்தில் அந்த சாதுஇருந்த இடத்துக்கு வந்தார்.''சுவாமி!நீங்கள் நிறைய சித்திகள் அடைந்திருப்பதாக கேள்விப்பட்டேன் அது தான் உங்களைப் பார்க்க வந்தேன்!''என்றார்.

சாது உடனே அந்த சந்நியாசியை வரவேற்று உபசரித்தார். அந்த சமயம் பார்த்து அவ்வழியால் ஒரு யானை போய்க் கொண்டிருந்தது!

சந்நியாசிஅதைப் பார்த்தார்.உடனே சாதுவிடம் "சுவாமி! நீங்கள் நினைத்தால் இந்த யானையைக் கொல்ல முடியுமா?''என்றார்."ஓ...செய்து விடலாமே!அது என்ன பெரிய காரியம்'' என்று ஒருபிடி மண்ணை எடுத்து ஏதோ முணு முணுத்து விட்டு அந்த யானை மேல் மண்ணைவீசினார் சாது.அவ்வளவுதான்!உடனே அந்த யானை கீழே விழுந்து இறந்து விட்டது.

சந்நியாசி இதைப் பார்த்து சாதுவைப் பாராட்டினார். பாராட்டைக் கேட்ட சாதுவுக்கு தலைகால் புரியவில்லை. மிகவும் சந்தோஷப்பட்டார்.

இப்பொழுது அந்த சந்நியாசி"அந்த யானையை மீண்டும் உயிர்ப்பிக்க முடியுமா?என்று கேட்டார்."செய்து விடலாமே! அது ஒன்றும் பெரிய காரியமில்லை!என்றார் சாது.

பின்னர் மறுபடியும்ஒரு பிடி மண்ணை எடுத்து மந்திரித்து யானை மீது வீசினார்.யானைமறுபடியும் எழும்பி நின்றது. இப்பொழுது அந்த சந்நியாசி கேட்டார்."சுவாமிஉங்களிடம் இருக்கும்சக்தி உண்மையிலேயே பெரியது தான். இருந்தாலும் இதனால் உங்களுக்குக் கிடைக்கும் நன்மைஎன்ன?

என்ன ஆன்மீக முன்னேற்றம் கிடைத்தது ஆண்டவனிடம் போவதற்கு இது ஏதாவது உதவி செய்ததா?இது தான் என் கேள்வி!''என்றார் அந்த சந்நியாசி.சாது கண்ணைத் திறந்து பார்த்தார். எதிரில் இருந்த சந்நியாசி மறைந்து விட்டார். அதற்குப் பின் தான் அவர் யோசிக்க ஆரம்பித்தார். அவருடைய தற்பெருமை அவரை விட்டு விலகிப் போய் விட்டது.

சித்திகள் கடவுளைக் காட்டுவதில்லை என்பதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைஇது.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் நாங்களும் சில சித்து வேலைகள்செய்ததுண்டு .அதனால்அதற்குப் பெயர் "மஜிக்'' கல்லூரிஆண்டு விழாசமயத்தில் மஜிக்ஷோ நடத்துவதாக முடிவு செய்தோம்.

ஒரு சின்னப் பெட்டி. அதற்கு இரண்டு பக்கமும் கதவு நடுவில் ஒருதடுப்பு இருக்கும்.ஒரு பக்கம் மண்ணை அள்ளிப் போட்டு...அடுத்த பக்கம் திறந்து சீனியைஅள்ளிக் கொடுப்போம்.ஏனெனில் -ஏற்கனவேஅதற்குள் சீனியைப் போட்டு வைத்திருப்போம்.இதில் அன்றைக்கு சொக்லேட் வாங்கி முன்னுக்கு போட்டு வைத்திருந்தோம்.

ஒரு சின்னப் பையனை தயார் செய்து "மேடையில் உனக்கு என்ன வேண்டும் ?என்று கேட்டால் சொக்லேட் வேண்டுமென்று சொல்லவேண்டும் .'' என்று பயிற்சியெல்லாம் கொடுத்து வைத்திருந்தோம்.மஜிக்ஷோ நடந்து கொண்டிருந்தது. மந்திரவாதி பையனைக் கூப்பிட்டார். பையன் வந்து நின்றான்.

"உனக்கு மிட்டாய் வேண்டுமா?லட்டு வேண்டுமா? அல்வா வேண்டுமா?'' என்று கேட்கிறார்.பையன் முழிக்கிறான்... "உனக்கு என்ன வேண்டும் ?என்று கேட்போம்என்றுதானே காலையில் சொன்னார்கள்.ஆனால் இப்பொழுதுஅது வேண்டுமா?இதுவேண்டுமா?என்று கேட்கிறார்களே...'' என்று குழம்பி விட்டான்.

சரி எது வேண்டுமானாலும் கேட்கலாம் போல என்று நினைத்துக் கொண்டு...எனக்கு அல்வா வேண்டும் என்று சொல்லி விட்டான்.

இது வரைக்கும் அவர் முழித்துக் கொண்டிருந்தான். இப்பொழுது மந்திரவாதி முழிக்க ஆரம்பித்தார்.மெதுவாக அவனுக்கு மட்டும் கேட்கும் படி"சொக்லேட் வேண்டும் என்று கேளடா.''என்றுபல்லைக் கடித்துக் கொண்டு சொன்னார்.

இது எல்லோர் காதிலும் விழ உடனே திரையை போடும் படி ஆகிவிட்டது.திரையைப் போட்டதும் மந்திரவாதி வேஷத்திலிருந்த மாணவன்அந்தப் பையனைத் துரத்த ஆரம்பித்தான்.அவன் மேசைக்குள்ளாக புகுந்து ஓடி விட்டான்.

ஸ்ரீராம கிருஷ்ணரின் கதையில் சித்திகள் கடவுளைக் காட்டுவதில்லை என்று தெரிந்து கொண்டோம். எங்களது கதையில் நாங்கள் செய்த சித்து வேலை எங்களையே எல்லோருக்கும் காட்டிக்கொடுத்து விட்டது. இது தான் வித்தியாசம்

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இரசாயன பகுப்பாய்வுக்காக ஐந்து நிறுவனங்களின் பால்மா வகைகள் சிங்கப்பூருக்கு அனுப்பி வைப்பு

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

நாட்டில் பயன்பாட்டில் இருக்கும் பால்மா வகைகள் அனைத்தையும் இரசாயன பகுப்பாய்வுக் குட்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் ஐந்து பால்மாவகைகள் சிங்கப்பூரில்இயங்கி வருகின்ற சுயாதீன இராசாயன பகுப்பாய்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக சந்தைப் படுத்தல் மற்றும் கூட்டுறவு நுகர்வோர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.அண்மையில்சீனாவில் பால் மா உணவை உட்கொண்ட சுமார் 13ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டதுடன் பலர் மரணிக்கவும் நேரிட்டது. இவ்வாறான பரிதாப நிலை இலங்கையில் ஏற்படாது இருப்பதை உறுதி செய்யும் வகையிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவுமே நாட்டில் பயன்பாட்டில் உள்ள பால்மா வகைகள் பரிசோதிக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக கொழும்பு 02 ஹேவ்லொக் வீதியில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்திளார் மாநாட்டிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்படி தகவலை வெளியிட்டார்.அவர் மேலும் கூறியதாவது, இலங்கையில் அங்கர் பால் மாவை விநியோகித்துவரும் நிறு வனம் சீனாவில் பால்மா விநியோகத்தில் 43 வீதகட்டுப் பாட்டை தன் வசம்வைத்துள்ளது.

இந் நிலையில்கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்நாட்டில் பால்மா உட்கொண்ட சுமார் 13 ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்ட நிலையில் இன்னும் வைத்திய சாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவ்வாறானதொரு துர்ப்பாக்கி நிலை நமது நாட்டுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அரசாங்கம் அக்கறையுடன் இருக்கிறன்து. அந்த வகையில் அமைச்சும் நுகர்வோர்அதிகார சபையும்ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போது இலங்கையில் பால்மா விநியோகத்தில் ஈடுபட்டுள்ள 5நிறுவங்களில் இருந்து உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுவரும் பால்மா மாதிரிகள் சிங்கப்பூரில் உள்ள இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(அ-5)

# வறிய குடும்பங்களுக்கு வருட இறுதியில் இரண்டாயிரம் வீடுகள் வழங்கப்படும்

## பாராளுமன்றத்தில் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

இலங்கையில் வாழும் அனைத்து வறிய குடும்பங்களுக்கும் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் நகர்புற மக்களுக்கென அமைக் கப்பட்டு வரும் 2ஆயிரம் வீடுக ளின் நிர்மாணப் பணிகள் இவ்வருட இறுதியில்முடிவடையவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையை நிறுவுவது தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில்சமர்ப்பித்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள வறிய மக்களின் வீடில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

வறுமை நிலையிலுள்ள மக்கள் வாழும் நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 10 பகுதிகள் தற்போது அபிவிருத்தி செய்யப் பட்டிருப்பதாகவும்அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-5)

# ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை!

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் இந்நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு பிராந்தியத்திலுள்ள நாடுகள் உரிய நடவடிக்கை மேற் கொள்ளா விடின் சுமார் 200 கோடி மக்கள் இந் நோயினால் பீடிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

நுளம்புகளினால் ஏற்படும் வைரஸை கட்டுப்படுத்த பிராந்திய மட்டத்தில் உபாயத்தை வகுத்து செயற்படுமாறு நாடுகளை கேட்கவுள்ளதாகவும் ஐ.நா.வின் உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

1991-2004 வரையிலான காலப்பகுதியில் டெங்குகாய்ச்சல் பிராந்தியத்தில் வேகமாக பரவியது. 1998 இல் 3.5 இலட்சம் பேர் இந் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தனர். உலகளாவிய ரீதியல் 250 கோடி மக்கள்இந்நோயால் பீடிக்கப்படும் ஆபத்து உள்ளது. இவர்களில் 180 கோடி மக்கள் மேற்கு பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாகும் எனவும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மழை நீர் தேங்கியிருத்தல், ரயர்கள், பிளாஸ்ரிக்கொள் கலன்களை வீசுதல், உலோககொள் கலன்கள் என்பன நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகுவதற்கு காரணமாகின்றன. உரிய முறையில் சிகிச்சை பெறுவதும் நோய் பரவாமல் முன் எச்சரிக்கையான ஏற்பாடுகளை மேற்கொள்வதும் அவசியமானது எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

# இராசி பலன்

26.09.2008
(புரட்டாதி 10, வெள்ளிக்கிழமை)
ஆயிலியம் முற்பகல் 10.15மணிவரை
துவாதசி பிற்பகல் 04.02மணிவரை
இராகுகாலம்-10.32-12.02 மணிவரை
சுபநேரம்-06.02-07.32 மணிவரை
பிரதோஷ விரதம்
சந்நியஸ்த மஹாளயம்

| | |
|---|---|
| மேடம் | வியாபாரவிருத்தி, சிறுவியாதி, சொத்துப்பிணக்கு, தனிவிரயம் |
| இடபம் | கல்வியில் ஆர்வம், சுபசெலவு, தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், |
| மிதுனம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, போசனசுகம், சுப நிகழ்ச்சி |
| கடகம் | கடின வார்த்தை, வேலைச் சுமை, மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம் |
| சிங்கம் | ஜனவசியம், பெரியோர் சந்திப்பு, தேகநலன், தெய்வசிந்தை |
| கன்னி | அமைதிக்குறைவு, சுப செலவு, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம் |
| துலாம் | தனலாபம், காரியஅனுகூலம், மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு |
| விருச்சிகம் | நிலைமாற்றம், அதிகாரம், கடினஉழைப்பு, போசன சுகம் |
| தனுசு | புதிய திட்டமிடல், செய்தொழில் விருத்தி, வீண்பயம், முயற்சி தாமதம் |
| மகரம் | வாகன பயம், எதிரிகள் தொல்லைகள், காரியதடங்கல், பிறருக்கு உதவுதல் |
| கும்பம் | நல்ல வரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி பலிதம், திடீர் பயணம் |
| மீனம் | நல்லசம்பவம், முயற்சிகை கூடும், தேகநலன், பாராட்டு |

# விண்ணப்பம் கோரல்

**வினைத்திறமை காண் தடைப் பரீட்சை**

திட்ட செயற்படுத்துகை அமைச்சின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்குமான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை இவ்வாண்டு டிசம்பர் மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்த படஉள்ளது. விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்க கூடியதாக தத்தம் திணைக்களத் தலைவர்களூடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கை பரீட்சைத்திணைக்களம், த.பெ.இல7 பெலவத்தை, பத்தரமுல்லை, என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப் பட வேண்டும்.

✦ ✦ ✦

நீர்பாசன நீர் முகாமைத்துவப் பிரிவின் தரம் IIஇல் உள்ள நிறுவன அபிவிருத்தி அலுவலர் களுக்கான I மற்றும் II ஆம் வினைத் திறன் தடைகாண் பரீட்சை 2009 ஜனவரி மாதம் கொழும்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும். இதற்கான விண்ணப்பங்களை தத்தம் திணைக்களத் தலைவர்களூடாக ஒக்டோபர் மாதம் 30 ஆம்திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக, பரீட்சை ஆணையார் நாயகம், இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை பத்தரமுல்லை எனும் முகவரி க்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 26/9/2008 ஆம் திகதிய வர்த்தக மானியையோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். ஓ

## சம்பந்தன் விருது

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப் பிள்ளை நினைவாக வருடாவருடம் ''சம்பந்தன் விருது'' வழங்கப்பட்டு வருகின்றது. 2007ஆம் ஆண்டு வெளிவந்த மிகச்சிறந்த நூலொன்றுக்கு இந்த விருது இம்முறை வழங்கப்படவுள்ளது. இந்த நூல் ஆய்வு நூலாக அல்லது ஈழத்து இலக்கியத்துக்கு வளம் சேர்க்குமெனக் கருதில் ஒரு பிரதியை அதன் இணைப்பாளர் கலாநிதி க.குணராசா, 75/10A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு சம்பந்தன் விருது இணைப்பாளர் கலாநிதி க.குணராசா கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம்

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் அரச சார்பற்ற நிறவனங்களிற்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார வேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

## பகவத்கீதை உபந்நியாசம்

கோண்டாவில் கிழக்கு நாராயணா வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஆத்மீக சபாவில் இன்று 46 ஆவது வாரமாக இடம்பெறும் ஆத்மீக நிகழ்வில் பிற்பகல் 4.30 முதல் 6.30 மணிவரை பஜனாமிர்தம், திவ்வியநாம வளி அர்ச்சனை, ஆராதனை, தியானம், நற்சிந்தனை மாணவர்களுக்கான கலை நிகழ்வுகள், பரிசளிப்பு விழாவும் அதனைத் தொடர்ந்து கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என்.தவராஜா ஜே.பியின் பகவத் கீதை உபந்நியாசம் இடம்பெறும். ஆத்மீக ஆர்வலர்களை கலந்து பயன்பெறுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா அறிவித்துள்ளது. (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணியளவில் ''மேன்மை கொள் சைவநீதி'' என்னும் விடயம் பற்றி யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை ஆசிரியர் க.கயிலைநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## கச்சான் செய்கை

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால்மேற்கு விவசாயிகள் சம்மேளனம் ஊடாக அப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட விவசாயப் பயனாளிகளுக்கு கச்சான் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கியூடெக் நிறுவனம் கச்சான் விதைகளை வழங்கியுள்ளது. இதன்மூலம் விதைகளைப் பெற்ற விவாசயிகள் கச்சான செய்கையில் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகிறது. (ஓ-134)

# கனகசெந்தி கதா விருது —பெறும் சிறுகதைகள்—

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் பிதாமகர் அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் ஆவார். ஈழத்தின் புனை கதைத்துறையின் மூத்த படைப்பாளிகளின் ஒருவரான அவர் யாழ்.இலக்கிய வட்டத்தை நிறுவி இளம் படைப்பாளிகளின் படைப்பாற்றலை உலகறிய வைத்த பெருமகனார்.நவீன இலக்கியத்தில் கனக செந்திநாதன் ஓர் இலக்கிய சக்தியாக இயங்கினார் என்பது பெரும் உண்மை. அவ்வாறான இரசிகமணி கனக செந்திநாதனின் இலக்கியப் பணியை என்றும் நினைவு கூரும் முகமாக உருவாக்கப்பட்ட இலக்கிய அமைப்பே கனகசெந்தி கதாவிருது ஆகும். ஈழத்து எழுத்தாளர்களால் படைக்கப்படும் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்குப் பெருமை சேர்க்கும் சிறுகதைகளை இனங்கண்டு அவற்றினை மெச்சி இரசிகமணி கனக செந்திநாதனின் பெயரால் காலத்துக்குக் காலம் சிறுபணப் பரிசிலும் சான்றிதழும் யாழ்.இலக்கிய வட்டம் வழங்கி வருகின்றது. கனக செந்திநாதன் கதா விருது பெற்ற சிறுகதை என மெச்சப்படுவது அச் சிறுகதைக்கும் படைப்பாளிக்கும் கிடைக்கும் பெருமையாகும்.

யூன்2007ஆம் மாதம் தொட்டு யூலை 2008 வரையிலான கால கட்டத்தில் வெளிவந்த சிறுகதைகள் பரிசீல னைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வரிசையில் பின்வரும்சிறுகதைகள் 2007-2008 காலகட்டத்தில் கனக செந்தி கதா விருதுக்கு தெரிவாகியுள்ளதாக கனக செந்தி கதா விருது இணைப்பாளர் செங்கை ஆழியன் அறிவித்துள்ளார்.

வைகறை மேகங்கள்-கந்தர்மடம் தி.மயூரன்
இது ஒரு அழிவுக்காலம்-ஆரையம்பதி ஆ.தங்கராசா
சகுனங்கள்-கனகாம்பிகை கதிர்காமன்
மதமாற்றம் -கே.டேவிட்
பள்ளிக்கூடம்-மட்டுவில் ஞானகுமாரன் (ஜேர்மனி)
பெரியத்தான்-சந்திரகாந்தா முருகானந்தன்
அதுகும் சரிதான்-மா.பாலசிங்கம்
வேடத் தனம்-மல்லிகை சி.குமார்.
வாழத்துடிக்கும்இதயங்கள்-ந. பாலேஸ்வரி
அதிசயம் -தேவகி கருணாகரன் (அவுஸ்திரேலியா)
ஒப்பாரிகோச்சி-மு.சிவலிங்கம்
துயரம்தோய்ந்த பயணத்திலே-எஸ்டேவிட்
அகதிமணம்-வெள்ளைமணாளன்
யாதும் ஊரே-செ.குணரெத்தினம். (ஓ)

# யாழ்.இந்து விஞ்ஞான மன்றத்தின் கணித-விஞ்ஞான போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றம் நடாத்திய மாவட்ட ரீதியிலான கணித விஞ்ஞான,பொது அறிவுப் பரீட்சை முடிவுகள் கல்லூரிஅதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சையில் 30 பாடசாலைகளிலிருந்து 5638 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இப்பரீட்சையில் முதல் மூன்று இடங்களைபெற்றவர்களுக்கான பரிசில்கள்எதிர்வரும் மாதத்தில் இடம் பெறவுள்ள கல்லூரி விஞ்ஞான தினத்தன்று வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசில்களுக்குரியமுதல் மூன்றுஇடங்களைப் பெற்றவர்களின் பெயர்விபரம் வருமாறு.

**கனிஷ்ட பிரிவு (தமிழ்)**

க. மதனாஹரன்-நெல்லியடிமத்தியமகா வித்தியாலயம்,ரு.அனந்தரூபிஷா-வேம்படி மகளிர் கல்லூரி, ஆன் .அபிநயா-வேம்படி மகளிர் கல்லூரி.

**கனிஷ்ட பிரிவு(ஆங்கிலம்)**

ஐ.லக்ஷியா-வேம்படி மகளிர் கல்லூரி, ந.அமிழ்தினி-வேம்படி மகளிர் கல்லூரி, இ.சிந்துஜா-பருத்தித்துறை மெதடிஸ்த பெ.உ.பா.

**மத்திய பிரிவு (தமிழ்)**

பா.நர்த்தகி-வேம்படி மகளிர் கல்லூரி, இ.ஜெசிக்கா -சென்ற் ஆன்ஸ்,ச.சதுர்த்திகா-யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

**மத்திய பிரிவு (ஆங்கிலம்)**

அ.அர்ச்சனா-வேம்படிமகளிர் கல்லூரி, வி.ஆரணி- வேம்படி மகளிர் கல்லூரி , ச.யோகினி-பருத்தித்துறை மெதடிஸ்த பெ.உ.பா.

**மேற் பிரிவு(தமிழ்)**

கு.கணரூபன்-விக்டோரியாகல்லூரி, இ.முரளிதரன்-மகாஜனாக் கல்லூரி, ந.சாயினி-இளவாலைகன்னியர்மடம். (ஓ)




# வருடாந்த விளையாட்டுவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை மறு தினம்ஞாயிற்றுக் கிழமைபிற்பகல் 1மணிக்கு நிலையத் தலைவர் சி.ஆனந்தராசா தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாகயாழ் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ச.சுபாஸ்சந்திரன், ஆரம்பப் பிள்ளை அபிவிருத்தி பிரிவு நல்லூர் கோட்ட இணைப்பாளர் திருமதி ம. விவேகானந்தன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-134)

## சுத்திகரிப்புத் தொழிலாளி நியமனம் செய்வதற்கான விண்ணப்பம்கோரல்

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் நிலவும் சுகாதார (சுத்திகரிப்பு) தொழிலாளி வெற்றிடத்தை சமயாசமய அடிப்படையில் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 8 ஆம் வகுப்பு சித்திபெற்ற 18-45 வயதிற்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரங்களடங்கிய விண்ணப்பப்படிவத்தினை 1.10.2008ஆம் திகதிக்கு முன்னதாக வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம், மருதனார்மடம், சுன்னாகம் என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு அண்மையில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (ஓ)

## இலங்கைவங்கி முகாமைத்துவ பயிலுனருக்கான எழுத்து மூல போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெறவிருந்த இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுனருக்கான எழுத்து மூல பரீட்சை இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயத்தின் முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

176 பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து தபால் மூலம் அனுப்பிவைக்க ஏற்பாடாகி உள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். இதற்கான தொலைபேசி இலக்கங்கள் 0212222735,0212223126.

இப் பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) யாழ் வேம்ப்டி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருப்பதாகவும் பரீட்சை திணைக்களம் மூலம் அறியக் கூடிய தாக உள்ளதாக இலங்கை வங்கி, வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ)


## பதவியுயர்வுப் பரீட்சைகளுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பம்

இலங்கை நிர்வாக சேவை, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்புத்தரம் மற்றும் வகுப்பு I ஆகிய பதவியுயர்வுப் பரீட்சைகளுக்குரிய பிரத்தியேக வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியிலுள்ள நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளன.

சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ள இவ்விசேட வகுப்புகளில் பங்குபற்ற அனுமதி கோரியவர்கள் மற்றும் மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் இப் பிரத்தியேக வகுப்புக்களில் தவறாது கலந்து கொள்ளுமாறு மத்திய-மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத் தலைவர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)



தென்புலோலி புற்றளை சித்திவிநாயக முன்பள்ளி விளையாட்டு விழாவில் புற்றளை மகா வித்தியாலய அதிபர் எம்.அனந்தீஸ்வரன் உரையாற்றுவதையும், பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் செல்வி விபுலசா பரமேஸ்வரனுக்கு பரிசில் வழங்குவதையும், சிறுவர்களின் வினோத உடைக்காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)



# தரிசனம் 1

ராவய

# இலங்கையின் தேசியக் கொடியும் கீதமும் இன ஒற்றுமையை ஏற்படுத்தினவா?

## தேசியக் கொடியினால் பிழையான நுழைவாயில் திறக்கப்பட்டது

பேராசிரியர் மென்டிஸ் ரோஹணதீர

1910-15ஆம் காலகட்டங்களில் இலங்கையர்களுக்காக குரல் கொடுத்த அருணாச்சலம் பொன்னம்பலம், இலங்கையர்களின் தேசியக் கொடி பிரிட்டிஷ் நூதனசாலையிலும் தம்புள்ளை சித்திரக் கலைகளிலும் தெரிகின்றது.

இதுவே சிங்கக் கொடியாகும் எனத் தெரிவித்திருந்தார். இதனால் இலங்கையர்கள் தமது கொடியாக சிங்கக் கொடியை பாவித்தமைக்கு வரலாற்றில் சாட்சிகள் இருக்கின்றன.



1945 இல் தேசிய சுயாதீன பிரேரணை அரச மந்திரி சபையில் முன் வைக்கப்பட்டது. இரண்டாம் மகா யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய நாடுகளில் பிரிவினைகள் ஏற்பட்ட போது காலனித்துவ நாட்டின் பொதுச் செயலாளர் இலங்கையில் தமக்குத் தேவையான பிரேரணையொன்றை நிறைவேற்றிக் கொண்டு தனக்கு அறிவிக்குமாறு தெரிவித்தார். இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கும் ;உகந்த அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ் தலைவர்களான எஸ்.ஜேவி. செல்வநாயகம், சுந்தரலிங்கம் மற்றும் பொன்னம்பலம் போன்றோர் பிரிட்டிஷாருக்கு மகஜரொன்றை கையளித்தனர்.

கொடி, இலச்சினை அல்லது வேறு முக்கியத்துவங்கள் அனைத்தும் அரசியல் மைப்பின் மூலமே தீர்மானிக்கப்படும். இதனை இங்கிலாந்துப் பாராளுமன்றம் பரிசீலித்து அரசியலமைப்பை தயாரிப்பதற்கு குழுவொன்றினை பிரேரித்தது. இதற்கமையவே சோல்பரிக் ஆணைக்குழு உதயமானது மந்திரிச் சபையும்,அமைச்சரவையும் இதனை எதிர்த்தது.

இத் தருணத்தில் தான் வகித்த சபைத் தலைவர் பதவியை துறந்த டி.எஸ். சேனநாயக்கா அதனை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவிடம் ஒப்படைத்தார். பின்னர் டி.எஸ்.சேனநாயக்கா,சேர்.அய்வர் ஜெனிங்ஸ் மற்றும் ஒலிவர் குணதிலக்கவுடன் இங்கிலாந்து சென்றார். சோல்பரி ஆணைக் குழுவிற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் பொறுப்பை பண்டாரநாயக்காவிடம் கையளித்த பின்னரே அவரது இப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

அப்பொறுப்பை அவர் நிறைவேற்றினார். பௌத்த மதத்திற்கும் ஏனைய மதங்களிற்கும் சம அந்தஸ்து இத் தருணத்திலேயே கிடைத்தது. அதாவது டொமீனியன் அந்தஸ்து இங்கிலாந்தின் அரச சட்டம் இங்கிருந்த ஆளுநரால் நடைமுறைப்படுத்தப் பட்டது. 1948இல் க்லொஸ்டர் பிரபு இலங்கைக்கு வருகை தந்து சுதந்திரத்தை பிரகடனப்படுத்தியதும் இவ்வாறானதொரு சூழ் நிலையிலேயே அகும்.

தேசியக் கொடியை உருவாக்குவது தொடர்பில் குழுவொன்றும் இச் சந்தர்ப்பத்தில் உருவாக்கப்பட்டிருந்தது. இக்குழுவில் ஜே. ஆர்.ஜயவர்த்தன.ரீ.பி.ஜாயா உட்பட சிங்கள, தமிழ்,முஸ்லிம் தலைவர்கள் பலர் அங்கம் வகித்தனர்.

தேசியக் கொடியாக சிங்கக் கொடியை பயன்படுத்துவதற்கும் ஏனைய இரண்டு இனங்களை வெளிப்படுத்துவதற்காக (பச்சை/செம்மஞ்சள்) நிறங்களை பயன் படுத்துவதற்கும் குழுவினால் தீர்மா னம் எடுக்கப்பட்டது. தம்புள்ளை விஹாரைச் சித்திரங்களில் சிங்கக் கொடி காணப்பட்டதும் கோட்டே இராஜ்ஜியத்தின் ஸ்ரீவிக்கிரம ராஜ சிங்க அரசன் பாவித்த கொடிகளில் சிங்கத்தின் ரூபம் இருந்ததாலும் இந்த இலச் சினை உறுதிப்படுவதற்கு காரணங்களாக அமைந்தது.

அத்தோடு நான்கு முனை களிலும் அரச மரத்தின் இலைகள் பௌத்த தர்மத்தை எடுத்தியம்ப பயன்படுத்தப்பட்டது.

பௌத்த மதத்தை மட்டும் கொடியில் காண்பித்தமைக்கு எதிர்ப்புக்கள் கிளம்ப வில்லை. ஆரம்பகாலம் தொடக்கம் இந் நாட்டில் பௌத்தம் பின்பற்றி வந்தமையே

## சிங்கள மக்களின் கருத்து

இதற்குக் காரணமாக அமைந்தது. சோல்பரி அரசியல் யாப்பில் பௌத்தத்தை மதிக்க வேண்டுமென்றும் ஏனைய மதங்களுக்கும் அந்த அந்தஸ்தை வழங்கவேண்டுமென் றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தேசியக் கொடி உருவாக்கப்பட்ட விதமே பிரிவினை வாதத்திற்கு வித்திட்டதென்பது எனது கருத்தாகும். சிறுபான்மையின மக்களுக்கு சிங்கக் கொடியில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லையென்ற கருத்து தமிழ், முஸ்லிம் மக்களிடையே மேலோங்கிக் காணப்பட்டது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கான வர்ண ரீதியிலான ஒதுக்கல் போதுமானதில்லையென்பதே அதன் கருத்தாகும். இந்தக் கேள்விக்கு என்னால் பதிலளிக்க முடியும்.

அதாவது 1910-1915 ஆம் ஆண்டு காலகட்டங்களில் இலங்கையர்களுக்கு ஒரு கொடி இருக்கவேண்டுமென்றும். அது சிங்கக் கொடியே ஆகுமென்றும் அருணாச்சலம் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டிருந்தார். பிரிவினைவாதத்திற்கு கொடி துணை போனதாக இதற்கு முன்பு தெரிவித்திருந்தேன். கொடி உருவாக்கப்படும் போது பச்சை மற்றும் செம்மஞ்சள் வர்ணங்களைக் கொண்ட எல்லைகள் பயன்படுத்தியமையால் ''பல்லின'' என்ற எண்ணம் வெளிப் படுத்தப்பட்டது. இருபதாம் நூற்றாண்டு காலகட்டம் வரை 'பல்லினத்துவம்' என்ற கருத்து இலங்கையில் எந்தவொரு இடத்திலும் எழுப்பப்படவில்லை. ஸ்ரீ லங்கா, சிங்கள தீபம், சி ஹ ல தி வ, சிஹலதிவ ஈழம் என்ற சொற் பதங்களி னாலேயே இலங்கை நாம கரணம் சூட்டப் பட்டிருந்தது.



ஆழம் என்பது சீஹலம் என்ற வசனமாகும். 4ஆம் நூற்றாண்டில் தென் இந்திய சுவடுகளில் ஈழம் என்ற சொற்பதம் காணப் படுகிறது. அந்த ஈழம் என்பது சீஹலாம் ஆகும்.

அதாவது இதன் அர்த்தம் சிங்கள தீவகம் என்பதாகும். ஆனால் இன்று தமிழ் ஈழம் கேட்கின்றனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்கள் இங்கு வந்து அவர்களது நிர்வாகத்திற்கு தேவையான விதத்தில் மிஷனரி கல்வி முறைமையொன்றை உருவாக்கியதன் மூலம் 20ஆம் நூற்றாண்டளவில் தமிழ் பிரபுக்கள் குழாம் ஒன்று உருவானது. எனவே பாராளுமன்ற அதிகாரம் சிங்கள பௌத்தர்களின் கைகளில் சிக்கிக்கொண்டதால் தமது சிறப்புரிமைகளுடைய வாழ்க்கை பறிபோகுமென்பதை 1940களில் தமிழ் பிரபுக்கள் குழுமம் புரிந்துகொண்டது.

இவர் கள் நாட்டில் தமக்கென தனிப்பிரிவு வேண்டு மென்ற தர்க்கத்தை தேசியக் கொடியிலுள்ள இரண்டு வர்ணங்களை முதன்மைப்படுத்தி வலியுறுத்தினர்.

இக் கொடியானது பல்லி னத்துவம், பல மதங்கள் உள்ள நாடென்பதை வலியுறுத்துகின்றது. எனவே ஒரு இனத் துக்கு மட்டும் விசேடமாக அமைய முடியாதென வாதிட்டனர். மூவினங்களும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கொள்கைக்கு எதிராக பிழையான நுழைவாயில் திறக்கப்பட்டது.

நாமனைவரும் ஒரே கொடியை ஏற்றுக் கொள்வதே இதற்கு பதிலாகும்.அது சிங்கக் கொடியாக இருக்கவேண்டும். இலங்கையர்கள் என்ற அறிமுகத்திற்குள் தமிழ்,முஸ்லிம் மக்கள் குழுமமும் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைவதன் மூலமே பிரிவினைவாதத்தை தோல்வியடையச் செய்யமுடியும்.

## தேசிய கீதம்

கொடி தொடர்பான எனது கருத்துடன் தேசிய கீதமும் இணைந்து கொள்கிறது. ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் முன்னேறிச் செல்வோம், அன்பை விஸ்தரித்து பேதங்களை தகர்த்தெறிந்து... இதன்மூலம் பெரும்பான்மையினம், சிறுபான்மையினம் என மக்களை பிரிக்கவில்லை.கொடியை விட தேசிய கீதம் பொதுவானதாக அமைந்துள்ளதென்பதே எனது கருத்தாகும். சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடுவதால் பிரச்சினைகள் தலைதூக்கலாம். ஆனால் இலங்கையின் ஆட்சி மொழி சிங்களமாகையால் எதுவித தவறும் இல்லை.

அத்தோடு தேசிய கீதமும் முரண்பாடுகளை தோற்றுவிப்பதாக அமையவில்லை. இலங்கையர்கள் என்ற எண்ணத்தை மனதில் வைத்து சிங்களம்,தமிழ்,முஸ்லிம் இனக் குழுமங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலேயே ஆனந்த சமரகோன் தேசிய கீதத்தை இயற்றி இருக்கின்றார். ஒவ்வொரு இனங்களினதும் முக்கியத்துவமும் இங்கு குறிப்பிடப்படாமலிருக்கலாம். ஆனால் ''பொதுத் தன்மை'' வெளிப்படுத்தப்பட்டிருப்பது முக்கியமானதாகும்.

சுந்தர சிறி பரணி
சுரந்தி அத்தி சோபமானா லங்கா
ஞான தனய லதக
மல் பலகதுரு பிரி

போன்ற சுந்தரமான பூமியை பற்றிச் சொல்லும் கீதம் இறுதியில் அவ்வாறான பூமிக்கு எம்மை அழைத்துச் செல்லும் என்ற பதம் தொடர்பாக பலர் விவாதத்திற்குரிய விதத்தில் பார்ப்பதைக் காண்கிறேன். இக் கீதம் எழுதும் போதும் சுந்தரமான பூமியான இலங்கை சுதந்திரமற்றதாகவே காணப்பட்டதென்பது எனது கருத்தாகும்.


அன்றிருந்து சமூக அரசியல் முரண்பாடுகளே இதற்குக் காரணமாகும். மீண்டும் வரலாற்றின் பெரு மைக்கு பூமிக்கு எம்மைக் கொண்டு செல்லும் விவாதம் இங்கேயே உருவாகிறது.

தேசிய கீதத்தின் சில வசனங்களை மாற்றுவது தொடர்பில் ஆனந்த சமரகோன் அவர்கள் பிற்காலங்களில் சிந்தித்தார் என்பது உண்மையான கூற்றாகும் .

இதனால் நமோ நமோ மாதாவிற்கு பதிலாக ஸ்ரீலங்கா மாதா என்ற பதம் சேர்க்கப்பட்டது. இந்த மாற்றத்திற்கும் ஒரு காரணம் உண்டு.

சிங்கள வசன நடை இலக்கியத்தில் வரலாற்று ரீதியிலான கடைப்பிடிப்புக்கள் இருக்கின்றன. சிறந்த சங்கராவ போன்ற இலக்கிய நூலில் ஜன்துஸ் அலங்கார என்ற பதங்கள் பாவிக்கப்படுகின்றன. எனவே தேசத்தையே பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய கீதத்தில் இதனைக் கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது.

எனவே நமோ நமோ என்ற பதத்திற்கு இருப்பில்லையென்பதால் ஸ்ரீலங்கா மாதா என்ற பதத்தை இணைத் ததால் பிரபல்யத்திற்கு உள்ளானது.



# தரிசனம்

வலம்புரி

# இலங்கையின் தேசியக் கொடியும் கீதமும் இன ஒற்றுமையை ஏற்படுத்தினவா?

## தேசியக் கொடி

இலங்கை சுதந்திரம் அடைந்த போது சிங்கக்கொடியை தேசியக் கொடியாக்க வேண்டும் என்ற கருத்தே நிலவியிருந்தது. தேசியக் கொடியில் காணப்படும் மஞ்சள் கோடும், பச்சைக்கோடும் ஏனைய இனங்களை பிரதிபலிப்பதாகவுள்ளன. எனினும் ஒரு நாட்டின் தேசியக் கொடியை உருவாக்குவதில், அந்த நாட்டின் அனைத்து மக்கள் சமூகமும் ஒருங்கிணைந்து ஏற்றுக் கொள்ளக்கூடியதான ஒரு சின்னமாக இருத்தல் வேண்டும்.

இதனாலேயே யாழ்ப்பாணத்தில் முக்கிய நிகழ்ச்சிகளில் நந்திக்கொடியை யும் ஏற்றும் வழக்கம் காணப்படுகிறது. ஒரு நாட்டின் தேசியக்கொடி அந்த நாட்டு மக்களின் மரியாதைக்குரிய அடையாளச் சின்னமாகும். இருந்தும் துரதிஷ்டவசமாக இலங்கையின் தேசியக்கொடி அனைத்து இன மக்களினதும் அடையாளத்தை, உணர்வை, பிரதிபலிப்பதாக அமையவில்லை.

ஏனைய நாடுகளை எடுத்து நோக்கும் போது அந்தந்த மக்களிடையே அந் நாட்டு தேசியக்கொடிகள் ஏற்படுத்தும் உணர்வை இலங்கையின் தேசியக்கொடி ஏற்படுத்த தமிழ், முஸ்லிம் மக்கள் தமது கொடியாகக் கருதி தேசியக் கொடியை ஏற்றும் வழக்கம் இல்லாமை பொதுப் பண்பாகிவிட்டது.

தேசியக் கொடியில் காணப்படும் சிங்கத்தை-வாள் ஏந்திய சிங்கத்தை எங்களுடையதென்னும் ஏற்புடமை தமிழ் மக்களிடையே அறவே இல்லை. தமிழ் மக்கள் தேசி யக் கொடி பற்றி அதிகம் வியாக்கியானம் செய்வதுமில்லை. ஏனெனில் அதனோடு அவர் கள் ஒன்றித்த மன நிலையில் இல்லை. எதுவாயினும் ஒரு நாட்டின் தேசியக்கொடி என்பது நாட்டின் வரலாற்றின் ஊடே வர வேண்டும். குறிப்பதே உண்மை.

இவ்விதம் தேசியக் கொடியும், தேசிய கீதமும், இது எங்கள் நாடு என்ற உணர்வை எல்லா இன மக்களிடையேயும் ஏற்படுத்த தவ றியமைக்குக் காரணம் இலங்கையில்;




சிங்களவர்கள் இருக்கிறார்கள், தமிழர்கள் இருக்கிறார்கள், முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஆனால் "இலங்கையர்கள் இருக்கிறார்களா?" இலங்கையர்கள் இல்லாததன் காரணமாகவே நாட்டின் தேசியக் கொடியும், கீதமும் "தேசிய உணர்வை" ஏற்படுத்த தவறிவிட்டன என்றே கூறவேண்டும்.

## இலங்கை எமது தேசம் என்ற உணர்வை ஏற்படுத்த தவறிய தேசியக் கொடியும் தேசிய கீதமும்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

சந்திப்பு-
என்.சண்முகானந்தன்
என் .விஜயசுந்தரம்

தேசியக் கொடியை உருவாக்குவதில் அன்றைய ஏற்பாட்டாளர்கள் முனைப்புக் காட்டவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.



இருந்தும் நீண்ட காலம் கடந்த நிலையில் தேசியக் கொடி என்ற விடயத்தில் ஏனைய இனங்கள் கரிசனை காட்டுவதில்லை. அல்லது அதனை விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனக் கூறலாம்.

ஆனால் தேசியக் கொடியில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுப்பப்படும் போது அங்கு பிரச்சினை தோன்றுகிறது.

இருந்தும் அதை நான் பெரிதாக கருதவில்லை. ஆனாலும் இங்கு இருக்கக் கூடிய பிரச்சினை இலங்கையின் தேசியக் கொடி எங்களுடைய கொடி என்ற நினைப்பு தமிழ், முஸ்லிம் மக்களிடம் ஏற்பட வில்லை. அந்த உணர்வை தேசியக்கொடி ஏற்படுத்தவும் இல்லை.

வில்லை என்றே கூறவேண்டும். இந்தியாவில் அந்த நாட்டின் தேசியக்கொடியில் காணப் பட்ட சக்கரத்தை எடுத்துவிட்டு அசோக சக்கரத்தை வைத்துள்ளார்கள். அசோக சக்கரம் இந்திய மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரியாதைக்குரிய அடையாளமாகும்.

இதன் மூலம் இந்தியத் தேசத்தின் கொடி அங்குள்ள கோடிக்கணக்கான மக்களின் உள் உணர்வோடு இரண்டறக் கலந்து போயுள்ளது.

இலங்கையின் இன்றுள்ள நிலையில் இனங்களுக்கிடையே உள்ள பிரச்சினைக்கு தேசியக்கொடியை முக்கிய காரணமாக கூற முடியாது. ஏதோ ஒரு வகையில் சிங்கள இனத்திற்கு தேசியக் கொடியில் இடமுண்டு.

இதனால் அது ஒரு பெரிய பிரச்சினைக்கான விடயமாக கருதமுடியாது. உத்தியோக பூர்வமாகத் தேசியக் கொடி ஏற்றப்படுகிறது.

ஆனால் சாதாரண நிகழ்ச்சிகளில் ப்ாக இந்தியத் தேசியக் கொடி அதனையே காட்டி நிற்கின்றது.

ஆனால் இலங்கையின் தேசியக் கொடி பௌத்த சிங்கள நாடு என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. *"தாயின் மணிக்கொடிபாரீர்"* என்றபாரதியின் உணர்வு இந்தக் கொடியில் இல்லையென அறுதியிட்டுக் கூறலாம்.

## தமிழர் கருத்து

இலங்கையின் தேசிய கீதத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பு உண்டு.

## தேசிய கீதம்

பண்டிதர் மு.நல்லதம்பி அதனை மொழி பெயர்த்திருந்தார்.

எனினும் தேசிய கீதத்திற்கு மொழி பெயர்ப்புத் தேவையானதா? என்ற கருத்து சிங்கள மக்களிடம் இல்லாமலும் இல்லை. சம்பிரதாயபூர்வமான சடங்குகளில் இசைக்கப்படுகின்ற பாடலாக தேசிய கீதம் அமைகின்றதே தவிர எங்களுடையது போன்ற உணர்வை நாம் அதிலிருந்து பெறமுடியவில்லை.

இருந்தும் தேசிய கீதம் நாட்டின் சகல மக்களிடையேயும் தேசிய உணர்வை ஏற்படுத்துகின்றதா? ஏற்படுத்தியுள்ளதா? என்பன பற்றி எவருமே கவனிப்பதில்லை. தேசிய கீதம் என்பது நாட்டினுடைய கருப்பையிலிருந்து வந்திருக்கவேண்டும். அது எல்லா மக்களையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

ஒரு இனத்தை மட்டும் தேசிய கீதம் பிரதிநிதித்துவம் செய்யுமாயின் அது தேசிய கீதம் என்ற பதத்திலிருந்து விலகியதாகவே அமையும்.


ஆக இலங்கையின் தேசிய கீதம், இலங்கையிலும், பல்லின மக்களின் உணர் நிலையிலும் காத்திரமான நேர்த்தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது. தேசிய கீதத்தின் மொழி பெயர்ப்பு ஓர் காலத்தின் தேவையாக அமைந்ததேயன்றி அந்த மொழிபெயர்ப்பினூடாக இலங்கை "நமது தேசம்" என்ற உணர்வு ஏற்படவில்லை என்

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே – நம் சிறீ லங்கா

நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
தமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே –நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தலையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே –நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே –நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

தரிசனம் தொடர்பான வாசகர்களின் கருத்துக்கள் எதிர் பார்க்கப்படுகின்றனர். தரமான கருத் துக் கள் இப் பகுதியில் பிரசுரிக் கப்படும். (ஆ-ர்)



# தரிசனம்

வலம்புரி

# யாழ்ப்பாண முஸ்லிம்களின் இன்றைய நிலை

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களின் நிரந்தரமான இருப்பு சாத்தியமற்றது போல் தெரிகின்றது.

1990ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மண்ணைவிட்டு வெளியேறிய முஸ்லிம் மக்கள் புத்தளம், சிலாபம், நீர் கொழும்பு,மட்டக்குழி, வவுனியா என நாட்டின் பல பாகங்களிலும் தங்கியுள்ளனர்.



2002ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளும் அன்றைய அரசும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏ-9 பாதை திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீளவும் யாழ்ப்பாணத்தில் குடியமர்வதற்கான சமிக்ஞைகள் விடுக்கப்பட்டதை யடுத்து யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு இடங்களில் வாழ்வது தமது ஜீவனோபாயத்திற்குக் கடினமானதாகவே அமையும் எனக் கருதிய சுமார் 275 குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தன.

சொந்த வீடுகளின் உடைவுகள் உடைந்து போன அவர்களின் மனங்களை மேலும் சிதைத்தபோதிலும், சொந்த மண்ணில் வாழ்கின்றோம் என்ற மன நிறைவை தந்தது என்கிறார் யாழ்.முகமதியா ஜும்மா பள்ளிவாசல் தலைவரும் பிரபல வர்த்தகருமான எம்.யு. எம். தாகிர்.

யாழ்ப்பாணத்து முஸ்லிம் மக்களின் இன்றைய நிலையை விளக்கிய அவர் , தமது மூதாதையர்கள் 1818 முதல் யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்ததை நினைவுபடுத்தி 1990களில் சுமார் ஒரு இலட்சம் முஸ்லிம்கள் யாழ். மாவட்டத்தில் வாழ்ந்தனர்.



1990இல் ஏற்பட்ட இடப்பெயர்வு யாழ்ப்பாணத்துடனான எமது உறவை நீண்ட கால இடைவெளிக்குள் தள்ளி விட்டது.

2002இல் மீண்டும் நாம் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றபோது 12 வருடகாலம் கடந்திருந்தது.

அப்போது சுமார் 275 குடும்பங்கள் யாழ்ப்பாண மண்ணிற்குத் திரும்பியிருந்தன. யாழ்ப்பாண மண்ணில் நிரந்தரமாக வாழும் காலம் கனிந்துவிட்ட தென்னும் நினைப்பு நான்கு வருடங்கள் நீடிப்பதற்குள் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏ-9 பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த முஸ்லிம்களில் அநேகர் வெளியேறத் தொடங்கினர்.

இந்த வெளியேற்றம் யாழ்.மண்ணில் முஸ்லிம்கள் நிரந்தரமாக வாழும் உறுதிப் பாட்டைத் தளர்த்தி விட்டதென்ற சோகத்தை எம்.யு. எம்.தாகிர் நினைவுபடுத்துகின்றார். யாழ்ப்பாணத்தில் வியாபாரம் செய்த வர்த்தக நிலையங்கள் கைமாறிப் போனமை முஸ்லிம்களைப் பெரிதாகப் பாதித்து விட்டது. இது தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எமது வர்த்தக நிலையங்களைப் பொறுப்பேற்றவர்கள் அல்லது அவற்றை ஆட்சிப் படுத் தியவர்கள் மனிதநேயத்துடன் அவற்றை உரிய வர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைக்கும் தாகிர் , யாழ்ப் பாணத்தில் தற்போது தங்கியிருக்கியிருக்கும் முஸ்லிம் மாணவர்களின் கல்விக்காக ஒஸ் மானியா கல்லூரி இயங்குகிறது. இங்கு தமிழ் மாணவர்களும் சேர்ந்து கற்கின்றனர். எமது ஜும்மா பள்ளிவாசலினால் அகதியா பள்ளியும் சிறுவர் பாடசாலையும் நடத்தப்படுகின்றன. சில அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் மாணவர்களுக்குக் கிடைக்கின்றன என்பதையும் ஞாபகப்படுத்தினார்.


## யாழில் இயங்கும் பள்ளிவாசல்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 30 இற்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் இருக்கின்ற போதிலும் தற்போது நான்கு பள்ளிவாசல்களே இயங்குகின்றன என்கிறார் பெரிய கடை ஜும்மா பள்ளியின் பிரதம பேஸ் இமாம் மௌலவி எம்.எஸ் மன்சூர். திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு முஸ்லிம் மக்கள் திரும்பிய போது ஜும்மா பள்ளி வாசலில் தமது கடமையைப் பொறுப்பேற்றவர்.

பல பள்ளிகள் தொழுகையின்றி இருப்பது தமக்கு வேதனையளிப்பதாகக் குறிப்பிடும் அவர் மண்கும்பான் வெள்ளைக் கடற்கரையை அண்மித்திருக்கும் பள்ளி வாசலுக்கு பாதுகாப்புக் காரணங்களால் செல்ல முடியாத நிலை இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் சுமார் 60 முஸ் லிம் குடும்பங்களே உள்ளன. பொருளாதாரக் கஷ்டத்தின் கடுமையான தாக்கமே இவர்களை யாழ்ப்பாணத்தில் தங்க வைத்துள்ளது.

தெருவோர வியாபாரம், கோவில் திருவிழாக் காலக்கடைகள் என்பவற்றை நம்



பியே இவர்களின் சீவியம் நகருகின்றது. வழமையான நிவாரணம் வழங்கப்படுகின்ற போதிலும் தங்கியிருக்கும் இருப்பிடங்கள் உடைந்து போன கட்டடங்களாகவே இன்னமும் காணப்படுகின்றன.

இவற்றை திருத்தி அமைப்பதற் கான வழி வகைகளை எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்து கொடுக்க முன்வரவில்லை.

2002ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக் குடியமர்ந்த போது சுமார் 3 ஆயிரம் முஸ்லிம் வியாபாரிகள் யாழ்ப் பாணத்துக்கு வந்து போனார்கள்.

இவர்களின் குடும் பங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிராத போதிலும் இவர்களின் வியாபார நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் குடும்பத்துடன் வாழும் முஸ்லிம்களுக்கு அவர்களின் வர்த்தக முயற்சிகளுக்குப் பெரும்சாதகமாக அமைந்தது.

ஆனால் ஏ-9 பாதை மூடப்பட்டதையடுத்து சுமார் 200 முஸ்லிம் வியாபாரிகளே கொழும்பு -யாழ்.வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இதன் காரணமாக முஸ்லிம்களின் செறிவு யாழ்ப்பாணத்தில் மிகக் குறைந்து விட்டது என்ற ஆதங்கம் மௌலவியின் உரையாடலில் வெளிப்பட்டதைக் காண முடிந்தது.

### போக்குவரத்தே இடையூறாகவுள்ளது



யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதில் முஸ்லிம்கள் ஆர்வத்துடனும் விருப்புடனும் உள்ளார்கள்.

ஆனாலும் தரை வழிப் பாதையின் தடை எமது ஆர்வத்தை மழுங்கடித்து விட்டது என தனது கருத்தை முன்வைக்கின்றார் இளம் வர்த்தகர்சுபை முகமத் அஜுவாத். யாழ்ப்பாணத்துக்கான பயணம் மிகவும் கஷ்டமானது. விமானம் மூலம் பயணிப்பதற்காக ஒரு வழிக் கட்டணமாக ரூபாய் பதினொராயிரத்தை செலவிட வேண்டியுள்ளது.

அதே நேரம் படைத்தரப்பின் பயண அனுமதியைப் பெறுவதில் ஏற்படக்கூடிய கால தாமதங்களும் எமது வர்த்தக முயற்சிகளுக்குச் சாதகமாக அமையவில்லை.


யாழ்ப்பணத்திலிருந்து இடம் பெயர்ந்த



முஸ்லிம் மக்கள் பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்தனர் எனினும் யாழ்ப்பணத்தில் வாழ்ந்த நினைவுகள் அவர்களை விட்டகலவில்லை. புத்தளத்தை விட யாழ்ப்பாணத்தில் இருப்பது பரவாயில்லை என்ற உள்ளுணர்வே யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் முஸ்லிம்களின் நிலைப்பாடாகும்.

ஏ-9 பாதை திறக்கப்படுமாயின் முன்பு போல பலர் யாழ்ப்பணத்துக்கு வரத் தயாராக இருக்கின்றனர்.

ஆயினும் அந்தக் காலத்திற்கான காத்திருப்பில் நிகழ்காலத்தை இழக்க முடியாதென உறுதிப்படக் கூறினார் அஜுவாத்.



# தரிசனம்

Muslim Information Centre SRI LANKA

# இலங்கையின் தேசியக் கொடியும் கீதமும் இன ஒற்றுமையை ஏற்படுத்தினவா?

இலங்கை முஸ்லிம்கள் தனித்துவமான ஒருசமூகம். ஆனால் இலங்கை அரசியலில் பொதுவான பல விடயங்களில் ஒன்றித்து ஏனைய சமூகங்களோடு சகவாழ்வோடும் விட்டுக்கொடுப்போடும் வாழ்கின்றனர்.

இவர்கள் தமிழ் சமூகத்தவர்கள் போன்று தனித்துவமான ஒரு தேசத்தை கேட்கவில்லை.மாறாக ஓர் இலங்கையில் ஒரு அலகை மாத்திரமே கேட்கிறார்கள். அவ்வாறே இலங்கை முஸ்லிம்கள் தேசிய கொடியையும் தங்களுடைய ஒரு கொடியாகவே பார்க்கின்றார்கள்.

ஆனால் இலங்கை அரசியல் தேசிய கொடியை தமிழ்த் தரப்பும் சிங்களத் தரப்பும் வெவ்வேறு கண்கொண்டு பார்க்கின்றார்கள். இவைகளுக்கு முக்கிய காரணம் அவர்கள் தங்களுக்கென்று தனியான ராஜ்சியம் கேட்பதேயாகும்.

மாறாக இலங்கை தேசிய கொடியில் முஸ்லிம்களும் ஓர் இனம் எனக் குறிப்பதற்கு பச்சை நிறத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறே தமிழ் சமூகத்தையும் குறித்துக் காட்டியுள்ளனர். இது ஒரு வகையில் திருப்தியைத்தருகின்றது.

இருப்பினும் வாள் ஏந்திய சிங்கமானது அவ்விரு சமூகத்தையும் நோக்கி இருப்பதானது இந்நாட்டில் இனங்களுக் கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு சிக்கலாக காணப்படுகின்றது. ஏனெனில் இச் சிங்கம் சிங்கள சமூகத்தை பிரதி பலித்துக்காட்டுகின்றமை முக்கிய அம்சமாகும். இந்த தேசிய கொடி தமிழ் முஸ்லிம் சிங்கள சமூகங்களில் சக வாழ்வில் பாதிப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றமையை அவதானிக்கலாம்.

அதாவது தேசிய கொடியில் சிங்கம் பிரதானமாகவும் அதனை நோக்கி நான்கு பக்கமும் அரச இலைகள் காணப்படுகின்றன. இதுசிங்கள இனத்தைப் பிரதானமாகக் காட்டி அது பிரதானமாக பௌத்த மதத்தை குறித்து இருக்கின்றது.

இச்செயற்பாடு நாட்டில் வாழ்கின்ற ஏனைய சிறுபான்மை இனங்களின் மனங்களை ஒருவகையில் பாதிப்பதாக இருக்கலாம். ஆகவே இலங்கையில் சிங்களவர்கள் தவிர்ந்த ஏனையவர்களையும் இணைத்துக்கொண்டு இத் தேசியக் கொடியை உருவாக்கியிருந்தால் தற்போது ஏற்பட்டுள்ள இவ்வாறான பிரச்சினைகள் மேலும் மேலும் வளராமல் குறைவடைந்திருக்கும்.

இவ்வாறு ஒருஇனத்தை முதன்மைப் படுத்தி இருப்பதான இலங்கையின் தேசியக் கொடி முஸ்லிம்களின் இனத்தைப் பிரதிபலித்திருக்கின்ற வீதம் குறைவாகவும் ஒரு வகை அடக்குமுறை இக் கொடியில் காணப்படுவதாகவும் சிலர் கூறுகின்றனர்.

இதனை அன்றைய சமூகம் மாத்திரம் தான் செய்தது என்று கூறமுடியாது. மாறாக அண்மையில் உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் கொடியிலும் முஸ்லிம்கள் உரியமுறையில் சித்தரிக்கப்படவில்லை இதனை உருவாக்கியவர்களும் ஏதோ ஒரு இனம், சமூகத்தை நோக்கமாகக் கொண்டுதான் உருவாக்கியிருக்கிறார்கள். அன்று விட்ட தவறை இன்றும் செய்வது தான் வருத்தத்துக்குரியதாக இருக்கின்றது.

இவ்வாறு இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையை எடுத்து நோக்கும் போது சிங்களம்-தமிழ் சமூகங்களுக் கிடையில் பல்வேறு வித்தியாசமான கருத்துக்கள் உதிக்கின்றன. அவை சிலரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் சிலரால் மறுக்கப்படுகின்றன.

ஆனால் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை இவ்வாறான பிரச்சினையில் சிக்கி தினம் தினம் பல்வேறு இழப்புக்களை சந்தித்து வருகின்றது.

மேலும் முஸ்லிம் சமூகத்தில் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் வித்தியாசமானவர்

## இலங்கையின் தேசியக் கொடியில் ஒருவகை அடக்கு முறை காணப்படுகிறது

சிறாஜ் மஷ்ஹூர் முஸ்லிம் கலாசார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனப்பணிப்பாளர்

கள் அதிலும் வடக்கு முஸ்லிம்கள் கிழக்கு முஸ்லிம்களிலிருந்து வித்தியாசப் பட்டவர்கள். அவர்களின் தாய் மொழி முற்று முழு



தாக தமிழாகக் காணப்படுகின்றது.

ஆனால் தென் இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் ஒரு சமுத்திரத்தில் ஆங்காங்கே காணப்படுகின்ற தீவுகளைப் போன்று பல இடங்களில் சிதறிவாழ்கிறார்கள். உதாரணமாக குருநாகல், கண்டி போன்ற இடங்களில் நூறுக்கும் அதிகமான முஸ்லிம் கிராமங்கள் இருக்கின்றன. இவர்கள் தங்களுடைய இருப்புக்காக நாளாந்தம் போராடிக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே இவர்களுக்கு இலங்கை



யின் தேசிய கொடியைப் பற்றிய சிந்தனையோ, தேசியக்கொடியில் முஸ்லிம்களைப் பற்றி கூறப்பட்டுள்ள கருத்தியலையோ சிந்திப்பதற்கே நேரம் இல்லை. தினமும் தங்களுடைய இருப்பையும் தொழிலையும் இவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற சிந்தனையிலேயே அவர்கள் வாழ்கிறார்கள்.

ஏனெனில் அண்மையில் சிங்கள சமூகத்துக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட ஹெல உறுமய வீரவிதான போன்ற அமைப்புக்கள் இம் முஸ்லிம்களை தினம் தினம் வேதனைப்படுத்துகின்றன. அவர்களின் வாழ்வியல் உரிமையைதிட்டமிட்டு சிதைக்கின்றன.

அதாவது முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற இடங்களில் பௌத்தர்களின் புனித மரமான அரச மரத்தை முஸ்லிம்களின் பிரதேசங்களில் நாட்டுவதன் மூலம் முஸ்லிம்கள் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வந்த அவர்களின் இருப்பை சிதைக்கின்ற செயலைச் செய்வதன் மூலம் தென்னிலங்கை முஸ்லிம்கள் நாளாந்தம் பல்வேறு பிரச்சி னைகளை எதிர்நோக்குகின்றார்கள். அரச மரம் பௌத்தர்களின் வணக்கத்துக்குரிய மரமாக இருக்க லாம். அது இன்னொரு சமூகத்திற் குரிய இருப்பை கேள்விக்குறியாக்கு கின்ற செயலாக இருக்கக் கூடாது.

## முஸ்லிம் சமூகத்தினின் கருத்து

இவ்வாறான செயற்பாடுகளி னால் தென்னிலங்கையில் சிதறி வாழ்கின்ற முஸ்லிம்கள் இவ்வா றான விடயங்களைப் பற்றி சிந்திப் பதில்லை. இச் சிங்கள இனவாத செயற்பாடு தற்போது வடக்கு கிழக்குகளிலும் திட்டமிட்டபடி செயற்பட்டு வருக்ன்றது.

தற்போதைய நிலையில் இலங்கையின் தேசியக் கொடி விளையாட்டு மைதானங்களிலும் சில விழாக்களிலுமே ஏற்றப் படுகின்றன.

ஏனெனில் விளையாட்டுக்களின் போது தான் இனவித்தியாசமின்றி ஒருவர் ஏந்திச் செல்வதாக இருக்கின்றது. இந்த விளையாட்டில் மாத்திரம்தான் சிறுபான்மையும் பெரும்பான்மையினரும் ஒன்றிணைகின்றனர். இவ்வாறாக ஒன்றிணைகின்ற விளையாட்டுகளினால் இலங்கை சமூகங்களுக் கிடையில் நல்லுறவையும் சக வாழ்வை ஏற்படுத்த முடியும்.

முன்னர் இலங்கை முஸ்லிம்கள் பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்கும் தமிழர்கள் இந்திய கிரிக்கெற் அணிக்கும் ஆதரவளித்து வந்தார்கள்.

ஆனால் தற்போது இவ்வாதரவு மாற்றம் பெற்று வருகின்றது. இது நாம் இலங்கையர்கள் என்ற எண்ணம் தோன்றி வருகின்றமையை உணரக்கூடியதாக இருக்கின்றது.

### தேசிய கீதம் பற்றிய முஸ்லிம் சமூகத்தின் பார்வை

இலங்கையின் தேசிய கீதமானது சிறப்பாக இயற்றப்பட்டுள்ளது. அது மனதுக்கு இதமாகவும் அதேநேரம் ஒரு தாய்மையின் உணர்வை ஏற்படுத்துகின்றது. அதனையும் இலங்கை முஸ்லிம்கள் வித்தியாசமாக பார்ப்பதில்லை. அக்கீதத்தில் "ஸ்ரீலங்கா தாயே" என சிறுவயதிலிருந்தே பாடுவதன் மூலம் இதுஎங்கள் தாய் நாடு என்ற உணர்வை எமக்குள் ஏற்படுத்துகின்றது.

ஆனால் இந்தியாவின் தேசிய கீதம் "வந்தே மாதரம்" என்று ஆரம்பிக்கின்றது. இது ஒரு வகை இந்துத்துவ கருத்தை பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

ஆனால் இந்தியாவில் வாழ்கின்றவர்கள் இனம், மதம், சாதி என்பவற்றுக்கு அப்பால் இத்தேசிய கீதத்தை உளமாரப் பாடுகிறார்கள்.

அவ்வாறே இந்தியாவின் சுதந்திரப் போராட்டமும் இந்திய மக்களால் இனம், சாதி, மதம் என்பவற்றுக்கு அப்பால் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இலங்கையின் தேசிய கீதத்தில் அவ்வாறான தனி ஒரு இனம், மதத்தை பிரதிபலிக்கின்ற தன்மை இல்லாமல் இருந்தும் இந்தியர்கள் தேசிய கீதத்தை பக்தியோடு பாடுவதுபோன்று பாடுவதில்லை என்பது துரதிஷ்டமே .

இதற்கு அடிப்படைக் காரணம் இலங்கை மக்கள் சில அரசியல் கருத்துக் குழப்பமான இனங்களுக்கிடையில் காணப்படுகின்ற ஒற்றுமை சகவாழ்வை பாதிக்கின்றது. இதில் இலங்கை முஸ்லிம்கள் எவ்வாறு வித்தியாசப்படுகிறார்கள் என்று சரியாக இனம் காணமுடியாது.

ஆனால் இலங்கையின் தேசிய கீதத்தில் பல சிங்கள சொற்பிரயோகம் காணப்படுகின்றன. அவைகள் சிறந்த முறையில் தமிழ் மொழி பெயர்க்கப்பட்டு இருக்குமாக இருந்தால் மேலும் சிறப்பாக இருக்கும். உதாரணமாக ''நமோ நமோ'' என்பதை ''நாம் நாம்'' என எழுதப்பட்டிருக்குமாக இருந்தால் மேலும்சிறப்பாக இருக்கும்.

இவ்வாறே தேசிய கீதத்தில் காணப்படுகின்ற "ஸ்ரீ" என்ற சொல்லும் ஒரு வகை அரசியல் பரிணாமமாகும்.இவ்வாறு இலங்கையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வருகின்ற அரசியல் மாற்றங்களின் போது தேசிய கீதத்திலும் புதிய புதிய மாற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் நிச்சயமாக இன்னும் நூறு வருடங்களுக்கு இனங்களுக்கிடையில் ஒற்றுமையான சக வாழ்வோடு வாழ்கின்ற சமூகத்தை காண முடியாது.

ஆனால் தேசியக்கொடியில் பகிரங்கமாகவே காணப்படுகின்ற ஒரு இனத்திற்கான முக்கியத்துவ சிந்தனை தேசிய கீதத்தில் காணக்கூடியதாக இல்லை.

முட்டாள் கடைசியாகச் செய்வதை அறிவாளி முதலில் செய்வான்.

– இந்தியா

வலம்புரி

## ஆயுதம் இல்லாத நேரத்தில் இந்தச் சிந்தனை வந்திருந்தால்...

விடுதலைப் புலிகள் தமது சகல ஆயுதங்களையும் கீழே வைத்துவிட்டு,போர்த் திறன்கள் யாவற்றையும் கலைத்துவிட்டு ஜனநாயக வழியில் பிரவேசித்தால் அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற ஒவ்வொரு தடவையும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தமது அரசு தயாராக இருப்பதாகக் கூறுவதே வழக்கம்.

ஆனால் இம்முறை வழக்கத்திற்கு மாறாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு போர்த்திறனைக் கலைத்தால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக இருப்பதாகக் கூறியிருப்பதானது வன்னியில் இடம் பெறும் போர்முனைப் பின்பான கருத்தென்பது உணர்தற்குரியது.

இலங்கையில் சார்க் மாநாடு நடந்தபோது அம் மாநாட்டில் எப்பாடு பட்டாவது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கலந்து கொள்ள வைப்பதில் இலங்கை அரசு பகீரதப் பிரயத்தனம் எடுத்தது.

அதற்காக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென்ற உத்தரவாதமும் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வழங்கப்பட்டது. ஆனால் நடந்தது எதுவுமில்லை.

டாக்டர் மன்மோகன் சிங் பதவியடிப்படையில் இந்தியாவின் பிரதமராக இருந்தாலும், இந்திய அரசியல் நகர்வில் முழு வகிபங்கும் றோவின் கைகளில் உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென்ற உத்தரவாதத்தை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வழங்குவதும் பின்னர் அதனை மீறுவதும் சிக்கலான விடயமல்ல என்பது இலங்கை அரசுக்கு நன்கு தெரியும்.

அதேநேரம் இந்தியப் படையின் உதவிக் கரம் தமக்கு இருக்கும் என்பதும், இந்தியாவின் உதவியுடன் வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் நடத்துவதென்பதும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயம் எனலாம்.

இந்நிலையில் சார்க் மாநாடு முடிந்து சில மாதங்கள் கடந்த நிலையிலும் தீர்வு என்ற சிந்தனை இலங்கை அரசிடம் ஏற்படவில்லை.

அவ்வாறாயின் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு வழங்கிய உத்தரவாதம் என்னவாயிற்று என்று கேள்வி எழுப்பினால், அதற்கான விடையாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உரை அமையும்.

ஆக, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றவாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஐ.நா. உரை அமைந்துள்ளது.

ஆயுதங்களைக் கைவிட்டால் பேச்சுவார்த்தை என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்பது ஜனாதிபதிக்கும் நன்கு தெரிந்த விடயம்.

அதே சமயம் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு அரசுடன் பேச்சு நடத்த முன்வர மாட்டார்கள் என்பதும் மகிந்தவுக்கு தெரிந்த நிறுத்திட்டமான உண்மை.

ஆக ஜனாதிபதியின் ஐ.நா. உரை தந்தை செல்வநாயகத்தின் அகிம்சை வழிப்போராட்ட காலத்தில் சிந்தனையாக எழுந்திருந்தால் அது ஆரோக்கியமானதாக இருக்கும்.

இதைவிடுத்து நிலைமை முற்றிப்போன இந்தக் காலகட்டத்தில் அவரின் உரை அர்த்தமற்றதாகவே போயுள்ளது.

# பஷில் ராஜபக்ஷவுக்கும் அநுர குமாரவுக்கும் "கோப்" குழுக்கூட்டத்தில் கைகலப்பு

(கொழும்பு)

அரசாங்க பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் (கோப்) கூட்டத்தில் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது. குழுவின் உறுப்பினர்களான ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கவிற்கும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் எம்.பியுமான பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலேயே கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் புதன்கிழமை நடைபெற்ற கோப் குழுவின் கூட்டத்தின் போதே இந்த கை கலப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க சபாநாயகர் டபிள்யு.ஜே.எம் லொக்குபண்டாராவிடம் முறைபாடு செய்துள்ளார். உறுப்பினர்கள் இருவருக்கும் இடையிலான வாய்த்தர்க்கம் முற்றிப்போய் கைகலப்பாக மாறியதையடுத்து குழுவின் இதர உறுப்பினர்கள் கைகலப்பை விலக்குவதற்கு முயற்சிகளை மேற் கொண்டதாகவும் சுமார் பத்து பதினைந்து நிமிடங்களுக்கு பின்னரே நிலமையைகட்டுப்படுத்தி உறுப்பினர்கள் இருவரையும்சமாதானப்படுத்தியதாகவும்தகவல்கள்தெரிவிக்கின்றன.

கோப் குழுக் கூட்டத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கான தலைவர் பதவிக்கு பதில் அதிகாரி யொருவர் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜே.வி.பி.எம்.பியான அனுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியதை அடுத்தே பசில் ராஜபக்ஷவிற்கும் அனுரகுமார திஸாநாயக்காவிற்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பாக மாறியதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

அரசாங்க பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் (கோப்) உறுப்பினர் என்ற வகையில் தனது கருத்துக்கு இடமளிக்கவிடாமல் அநாகரிகமான முறையில் தடுத்தமை தனது சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்று அனுரகுமார திஸாநாயக்க எம்.பி.சபாநாயகரிடம் முறைபாடு செய்துள்ளார். (அ-5)

# மாகாண மட்ட ஆங்கில தின நாடகப் போட்டி முடிவுகள்

வடக்குமாகாணகல்வித்திணைக் களத் தால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட ஆங்கில தின வீடியோஒளிப்பதிவு செய்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு.

(இதன்ஏனைய போட்டி முடிவுகள் 6.9.2008வலம்புரியில் வெளியாகியுள்ளது.)

**மனனப் போட்டி *தரம் -3***

உ.விதுஷன்-யா/சென் ஜோன் பொஸ் கோ வித்தி ,பி.காருண்யா-யா/சென் ஜோன் பொஸ்கோ வித்தி,வா. வராகி-வ/சைவப் பிரகாச பெண்கள் பாடசாலை.

***தரம் -4***

சி.கிவாசினி-வ/ஸ்ரீ நாகராஜா வித்தி, அ.பெஞ்சமின்-யாழ்ப்பாணக்கல்லூரி ,க. ஜெயராஜா-யா/சென்ஜோன் பொஸ்கோ வித்தி ,

*தரம் 5*-கு.எட்மண்ட்-யா/சென்ஜோன்பொஸ்கோ வித்தி , சி.விசாகி-வ/சைவப்பிரகாச பெண் கள்பாடசாலை ,ச.அன்னை மாதுஷனி- ம/சென்சேவியர் -.

*தரம் -6* மு.துவிஜனன்-வவுனியா தமிழ் ம.ம.வி, த.லக்ஷ்மி-யா/மெ.பெண்கள் உயர்தர பாடசாலை ,ஜெ.சலோமி-யா /உடுவில் பெண் கள் பாடசாலை -.

*தரம் -7*-பு.சக்தியா-வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வி ,சாதே னுஜா-யா/இளவாலை கொன் வென்ற் ம.வி ,இ.மைக்கேல் றாஷ்மி-ம/செ.சேவியர் பெண்கள் பாடசாலை-

*தரம் -8*-அ.கிரிஷாந்தன்-யா.சென் ஜோன்ஸ் கல்லூரி , ப.இனோகா நிதர்ஷினி-ம/சித்தி விநாயகர் இந்துகல்லூரி ,பெ. பிறெய்சி கன்னா-சுண்டுக்குளி மகளிர் வித்தி- *தரம் -9*

க.துளசிகா-ம/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, சி. ஜோய்டெறிக் -யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி, ஜெ.ஜீவநேசன்-யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி.-

*தரம்10*-பொ.திவாகரன்-யா/சென்பற்றிக்ஸ்கல்லூரி ,செ. குயீன் ஜொலிற்றா- வ/றம்பைக்குளம் பெண்கள் மகாவித் தியாலயம் .ஜெ.இக்னேசியஸ்-யா.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

***தரம் 11***

பெ. லவனேசன்-வவுனியா தமிழ் ம.ம.வி , கீ. புவனேஸ்வரன்-யா/அருணோதயாக் கல்லூரி ,நா.சசிக்குமார்-ம/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி

**தயாரிக்கப்பட்ட பேச்சுப் போட்டி**

***தரம்-12***

இ.கதுஷா-யா/ வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலை ,சி. பபிதா-யா / நெல்லியடி ம.ம.வி ,சி.தர்மகுலசிங்கம்-வ/றம்பைக் குளம் பெண்கள் ம.வி

***தரம்-13***

ஹெ.கிறேஸ்ஹயசிந்த்-சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை ,இ. காயத்திரி-றம்பைக்குளம் பெண்கள் ம.வி ,சி. நிமலன்-வ்.வவுனியா தமிழ் ம.ம.வி

**உடன் தயாரித்த பேச்சுப்போட்டி -*தரம் 12***

த.மோகனரங்கன்-வ/வவுனியாதமிழ் ம.ம.வி ,செ.துளசினி-வ/றம்பைக் குளம் பெண்கள்ம.ம.வி, ம.அழகராசன்-யா/இந்துக் கல்லூரி

*தரம்13*-இ.காயத்திரி-வ.றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தி , ச.லக்ஷிகா-யா/வேம்படி பெண் கள் உயர்தர பாடசாலை ,பா.நீதுஜன்-யா/மகாஜனாக் கல்லூரி

**நாடகம்ஆரம்பப்பிரிவு-தரம் 3-5**

யா/உடுவில் பெண்கள்பாடசாலை,ம/சென்சேவியர் ஆண் கள் பாடசாலை, வ/வவுனியாதமிழ் ம.ம.வி

**கனிஷ்ட பிரிவு -தரம் 6-9**

யா/உடுவில் பெண்கள் பாடசாலை ,வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வி , ம/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு- *தரம்11-13***

யா/வேம்படி மகளிர்உயர்தர பாடசாலை , வ/றம்பைக் குளம் பெண்கள் பாடசாலை ,ம/சென்சேவியர் பெண்கள் பாடசாலை

**சிரேஷ்ட கவிதை நாடகம்- *தரம் 11-13***

யா/உடுவில் மகளிர் கல்லூரி ,ம/ சென் சேவியர் ஆண்கள் பாடசாலை ,வ/றம்பைக்குளம் பெண்கள் ம.வித்தியாலயம்.(ஓ)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 39

பக்தி என்பது ஓர் உயர்ந்த அன்பு நிலையாகும். இது சாதாரண மனித நிலையில் செலுத்துகின்ற அன்பு நிலையை விட உயர்வானது. நாம் ஒருவர் மீது செலுத்தும் அன்பில் சுயநலம் கலந்திருக்கும். சுயநலமற்ற தூய்மையான அன்பு நெறியை அடியார்கள் பலர் மேற் கொண்டிருந்தனர். அவர்களில் வயதில் மிக இளைய வரான சம்பந்தர் அன்பு நிலையை மனித நிலை நின்று மக்களுக்கு உணர்த்தியுள்ளார். இளமைப்பருவத்தில் ஏற்படும் இயல்பான காம உணர்வை இறைவன் மீது கொள்ளும் காதல் நிலையாக விளக்கியுள்ளார்.

காமம் என்பது உடல் தொடர்பான ஓர் உணர்வாகும். காதல் என்பது உள்ளம் தொடர்பானது. மனித வாழ்க்கையில் காமத்திற்குப் பலர் அடிமையாகி நெறிதவறிச் செல்கின்றனர். காமம் அவர்களுடைய உள்ளத்தில் அன்பு மறைய துணைநிற்கும் . அதனால் அவர்கள் சுயநலம் மிக்கவராய் மாறிவிடுவர். இந்நிலை சமூகத்தின் செம்மையான வாழ்க்கை நெறியைச் சீரழித்து விடும். இதனைச் சீர்செய்ய பக்தி நெறியை அடியார்கள் கைக் கொண்டனர். மக்கள் வாழ்க்கையில் அன்பு நெறியே தொடர வேண்டும்.

சம்பந்தர் இத்தகையதொரு அன்புநெறியை இளமை நிலையின் நின்று விளக்கியுள்ளார். இளமை நிலையில் தோன்றும் காம உணர்வைக் கட்டுப்படுத்தி அது அன்பு நெறியிலே செயற்பட ஒரு வழியைக் காட்டுகிறார். தன்னை ஒரு பெண் ணாக உருவகம் செய்துகாம உணர்வின் செல்வாக்கைத் தடைசெய்ய இறைவனையே காதலனாக உருவகம் செய்து பாடியுள்ளார். தனது நிலையை இறைவனிடம் எடுத்துச் சொல்வதற்கு வண்டைத்தூது விடுகின்றார்.

வண்டு மலர்களிலே சென்று தேனுண்டு மகிழ்கின்ற ஒரு நிலையில் பெண்ணின் உள்ளத்து நினைவுகளை அவளது விருப்பத்திற்கு உரியவரிடம் சென்று சொல்வதற்கு ஏற்ற தூதன் எனச் சம்பந்தர் தெளிவாக உணர்த்துகின்றார். இயற்கை அழகு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கொஞ்சும் இனிமையான சூழலில் தேன் உண்டு மகிழ்ந்து பெடையுடன் பாடிக் கொண்டிருக்கும் வண்டை நோக்கிப் பாடுகிறார். தன்னுடைய உள்ளங்கவர்ந்தவனின் தோற் றத்தை தெளிவாக விளக்கிக் கூறி, தூது போகச் சொல்லி வேண்டுகிறார். மனித நிலையில் உள்ளத்தில் எழும் காம உணர் வைவளர வெட்டாது தடுக்க இறை மீது அன்பு கொள்ளும் மனப்பக்குவத்தையே மருந்தாகக் காட்டு கிறார். பக்தி என்னும் உயர்ந்த அன்பு நிலையில் உள்ளத் தில் ஏற்படும் பரவச உணர் வால் மனித வாழ்க்கையின் செல்நெறி நன்னெறியாகும் என்பதே சம்பந்தர் பெற்ற மனப்பக்குவமாகும். அதனையே எமக்கும் புகட்டியுள்ளார்.

*'வண்டரங்கப் புனற்கமல மது மாந்திப் பெடையி னொடும்*
*ஒண்டரங்க இசைபாடு மளியரசே ஒளி மதியத்*
*துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்*
*பண்டரங்கர்க்கு என்னிலை பரிந்தொருக்காற் பகராயே'*

# பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்காக முதலாம் கட்டமாக தெரிவுசெய்யப்பட்டோர்

செல்வி. நடராஜா மேனகா(806983543V), திரு. நாகநாதன் சந்திரகுமாரன் (7717844 37V), செல்வி. கலைவாணி வடிவேல் (79679 2582V),திரு.ஐதுறூஸ் மரைக்கார் ஆஷிக் (771560253V), செல்வி.சரீனா பேகம் அப் துல் றகுமான் (777070835V), திருமதி. அலாவுதீன் அர்ஷத திரு.சீவரத்தினம் மனோகரன் (710431043V).

திருமதி. சிவசக்தி ஜெயகாந்தன் (695401 850V), திருமதி.லோறன்ஸ் சூரியகு மார் ரதி (795282858V),திரு. வேலுப்பிள்ளை சிவகரன் (810883774V),திருமதி. தர்சிஜா நகுலன் (816661064V).

திரு. கணேசபிள்ளை கிருபாகரன் (740313 649V),திரு. அந்தோனிப்பிள்ளை யேம்ஸ் மேஷன் (742052044V), செல்வி. சுவர்ணா சண்முகராசா (807593072V), திருமதி. கஜேந்திரபிரபன் குந்தவி (796762438V), செலவி. பவளமலர் கிட்டிணர் (775941618V), செல்வி. மேகலா இராசையா (835033538V), செல்வி. சயந்திகா பரம நாதன் (826501626V).

செல்வி. சியாமளா அருளானந்தம் (817122660V),திரு. சிவராசா இலம்போதரன் (822244475V), திருமதி.செல்வானந்தராசா சியாமளா (755451789V),செல்வி. விமாலினி வெங்கடாசலம் (745913792V),செல்வி. யோ ககலா வீரசிங்கம் (777633945V), திருமதி. பஞ்சாட்சரமூர்த்தி தமிழ்ப்பிரியா (78505 1211ஏ),செல்வி.இரேணுகா பரராசசிங்கம் (826491086V).

திருமதி. பிரதீபா காயத்திரி கஜபதி (796252600V),செல்வி. சிவஞானவதி சிவமூர்த்தி (815783433V),திருமதி. ஆனந்த கணேஷன் தீபா (825932453V), செல்வி. தேதீஸ்வரி சபாரத்தினம் (775852 720V), செல்வி.வித்யா வேலுப்பிள்ளை (81627 3170ஏ),திரு. கணபதிப்பிள்ளை நடேஸ்வரன் (780810823V).

செல்வி. கிருபாகினி கந்தசாமி (8159002 27V),திருமதி சிவகாந்கன் சீமாட்டி 81828 2931V),திரு.அரிச்சந்திரன் முருகதாசன் (791952174V),திருமதி. ஜீவகன் லதா (827521558V),திரு.தேவராசா பகீரதன் (743070399ஏ),செல்வி.பிரேமளா இராசரட் ணம் (786003806V),செல்வி.லதா மோகன் (805703385V).

செல்வி. சுரோமி ஆறுமுகநாதன் (8078319 09V),செல்வி. சங்கீதா யோகநாதன் (8253017 39V),செல்வி.ஆனந்தி கந்தசாமி (76747 0649V),திருமதி.கமலேஸ்வரன் சுதர்சினி (816142407V),செல்வி.மேனகா சிவலோக நாதன் (786720028V), செல்வி. கணேசராசா பிறகாசினி (756800701V), செல்வி.தபேபா தினி வேலுப்பிள்ளை (796322306V),திரு. கிருஸ் ணசாமி ஜெகதீசன் (750451632V), திரு.பஞ் சலிங்கம் அங்கசன் (823330260V),செல்வி. சுத்தி யாம்பாள் தம்பலிங்கம் (815373189V).

செல்வி. திருச்செல்வி இராசரத்தினம் (766840760V),செல்வி ஹம்ஷாநந்தினி கைலாசபிள்ளை (806673650V), செல்வி. சசிதரா உமாபதி (778271695V),செல்வி சாறோஜா முருகேசு (776050830V), செல்வி. தாரணி தியாகராசா (838152317V), திரு.செல வராஜா ஜெயசீலன் (773202257V), திரு.சிவ லிங்கம் செந்தூரன் (812925032V), திரு மதிகலிஸ்டர் பூழ்தியேனிபூலா (81522 4370ஏ).

செல்வி. ஜெயலட்சுமி தருமராசா (675921776V),செல்வி.ஜியவதா அப்புத்துரை (775102519V), செல்வி பிரமிளா தெய்வேந் திரன் (795824812V),திருமதி.சிவா சுதர் சினி (785511301V),திரு.புவனேந்திரன் குகநந்தன் (821013089V),திரு. பரமேஸ் வரன் கஜகரன் (780112620V), திரு.துரை ராசா ஜீவானந்தன் (812402579V),செல்வி. நிகே தினி கார்த்திகேசு (816134200V)

செல்வி. எழிலோவியம் சிவசுப்பிர மணியம் (767282192V),செல்வி. பிரபா கணேசமூர்த்தி 807624091V), திரு.லோ றன்ஸ் கிறிஸ்ரி ஆனந் 781760463V), திரு.நடராசா சிவானந்தன் (762000806V),

70 திருமதி.உதயகுமார் சுமித்திரா (785163354V), திரு.முத்துகிருஷ்ணன் காண டீபன் (730711085V),திருமதி.நிஷாந் ஜனனி (8175013 38V), திரு. ஞானமுத்து அன்ரன் சாள்ஸ் (773142 629V), திரு.சண்முகராஜா முகுந்தன் (8025 62888V), செல்வி.சிவப பிரியா சிவபாதரத்தினம் (836222695V), திரு.சீனிவாசகம் அஜநதன் (773583706V), திருமதி. ரமேஷ்குமார் ஜெயந்தி (78712149 7V), திரு.பரராசசேகரம் சுரேந்திரன் (810 794968V), செல்வி. ஜெனந்தினி சோம சுந்தரம் (825102043V).

திருமதி.ஜோபறஸன் தயாழினி (825243798V),திரு.பிரபாகரன் சுபீகரன் (808482592V),செல்வி லதா நடராசா (78600 3601V),திரு.சூடாமணி தர்சன் (7914135 32V),செல்வி பவானி கனகலிங்கம் (7759238 65V),செல்வி. பத்மநிதி செல்லையா (7754 73886V),திரு.நேசதுரை ஜெனார்த்தனன் (761150480V),திரு.சின்னராசா மதிரூபன் (810223251V),திரு. சுந்தரம்பிள்ளை பிர பாகரன் (801453619V),திரு. சபாரத்தினம் சபாகரன் (802824742V),திருமதி சிவகரன் இளநங்கை (787462871V),செல்வி.லதா சின்னையா (788584504V),திரு.தம்பு ஸ்ரீகரன் (742633055V),

திரு.சுப்பிரமணியம் மகிந்தன் (802952520V), செல்வி. தர்சனி அமிர் தலிங்கம் (815122879V),திரு. நடேச பிள்ளை பிரதீபன் (802632029V),திரு சோதிநாதன் ஸ்ரீகிருஷ்ணா (791033454V), திருமதி.பிரஜ சேகரன் நிகால் நிறோஜினி (766950434V), திரு.தணிநாயகம் அமலதாஸ் (81275 2278V), திரு.ஸ்ரீகாந்தன் சுதாகரன் (7811815 87V),செல்வி.உஷாநந்தினி கணேச ரத்தினம் (808262665V).

திரு.செல்வரத்தினம் சசிகுமார் (782792806V),திருமதி.தனஞ்செயன் சத தியா (805532114V),செல்வி.மிகாய தர்ஷா யினி செபஸ்ரியாம்பிள்ளை (81709 3787V), செல்வி.ஜெமல்டா ஜோர்ச் (816082773V), திரு.இராசையா கிருஷ்ணதாஸ் (741 4109 31V), திரு.ஜெயரத்தினம் ஜெயபிரியன் (801803024V), செல்வி.சுஜீவா சுப்பிரம ணியம் (817162860V),திருமதி மகேஸ்வரன் சொருபகாந்தி (746641311V),

திரு. ஆனந்தமயில நித்லவர்ணன் (781901768V),செல்வி.சுவிதா செகசோதி (808310392V),செல்வி. தயாழினி கணபதிப பிள்ளை (807681583V),திரு.இரத்தினராசா கிருஷ்ணராசன் (801341802V), செல்வி. சுகன்யா அமிர்தலிங்கம் (806692905V), திருமதி.லெஸ்லி நிஜி நீலாம்பிகை (778 194163V),திரு. இந்திரன் கஜேந்திரன் (790484142V), செல்வி.இராமலிங்கம் வதனி (795923454V), திரு.சொக்கலிங்கம் சிவ குமார் (730330111V).

செல்வி.சித்ரூபினி கனகசபாபதி (797832103V),செல்வி.பாமினி சுப்பிரம ணியம் (786900670V),திரு.கணபதிஐயா குலசேகரன் (771693768V), திரு.விஜயரட ணம் எமல்ஸ் நிர்மலன் (802222980V), திருமதி. சபீத்தா கருணாமூர்த்தி (815251 490V),செல்வி. கௌரீஸ்வரி கோவிந்து (805311835V), திரு. நந்தகோபால் செல்வ குமரன் (83013533V).

திரு. கிருஷ்ணன் செல்வரூபன் (8126 32450V),செல்வி. றசிதாசினி வைரமுத்து (815912268V),செல்வி.பிரியதர்சினி ஆனந்தராசா (818404638V), திரு.இரத்தின சிங்கம் திலீபன் (782764756V),திரு. மகேசு பங்கயன் (792732666V), செல்வி. இராதிகா இராசரத்தினம் (827961094V), செல்வி. ஸ்ரீநந் தினி கந்தசாமி (755414115V), செல்வி. கமலினி வரதராசா (778343460V), திரு.சிவ பாதம் தர்மசீலன் (790262816V),செல்வி. திருமகள் கெங்காதரன் (736373084V).

